பு.ம.தே.அ.ச., சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு, மற்றும் ஏனைய பங்காளர் தரப்புகள், குறிப்பாக உ.சு.ஸ். என்பவற்றின் கூட்டொத்துழைப்பில் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கான ஒரு பணி நிகழ்ச்சித் திட்டத்தை இனங்கண்டுள்ளது. இது பற்றிய சுருக்கமான ஒரு விபரம் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஐந்து ஆண்டு காலப் பகுதியில், எமது கூட்டு முயற்சிகளைக் கொண்டு, பொது சுகாதார பிரச்சினைகளுக்கு முடிவுகட்டக் கூடிய ஒரு அளவில், புகையிலிருந்து ஏற்படும் தீங்குகளை ஒழிப்பதற்கு எம்மால் முடியும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதே வேளையில், சகல நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் மதுபானம் மற்றும் புகையிலை ஆகியவற்றின் பாவனையினால் ஏற்படும் தீங்குகளை மிகக் குறுகிய சாத்தியமான ஒரு காலப் பகுதியில் கட்டுப்படுத்துவதற்கும் நாம் கடுமையாக பாடுபடுவது அசியம் என்பதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

எமது இலங்கை நாடு புகையிலையும் மற்றும் மதுபானமும் அற்ற ஓர் நாடாக விளங்க எனது பிரார்த்தனைகள்!.

டாக்டர் பாலித்த அபேகோன்
தலைவர்
புலையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை


මන් දුමය තුරන්
කරමු


ජීවිතය ඔය නොවේ

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை



දුම්කොළ හා මද්‍යසාර පිළිබඳ ජාතික අධිකාරිය
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரச்சபை
National Authority on Tobacco & Alcohol

நாம் யார்?

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை (பு.ம.தே.அ.ச.) 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான அதிகார சபை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டது. பொது சுகாதார கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல், ஆதரவு அளித்தல் என்பவற்றின் ஊடாக புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் ஆகிய நடத்தையுடன் சம்பந்தப்பட்ட தீங்குகளை குறைக்கும் பொறுப்பு குறித்த சட்டத்தினால் இந்த அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தூரநோக்கு:
புகையிலையினதும் மற்றும் மதுபானத்தினதும் பாவனை நீங்கிய மக்கள் வாழும் ஒரு நாடாக விளங்க செய்தல்.

செயற்பணி:
புகையிலையினாலும் மற்றும் மதுசாரத்தினாலும் ஏற்படும் தீங்குகளிலிருந்து மக்களை விடுவித்து அவர்களை பாதுகாக்கும் வகையில் சகல சமூக பிரிவினர்களையும் ஒன்றுதிரட்டி ஊக்குவித்தல்.

குறிக்கோள்கள்:

1. பொது மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்கக் கூடிய சரியான கொள்கைகளை இனங்காணுதல்
2. புகையிலை சார்ந்த பொருட்களினதும் மற்றும் மதுசாரம் சார்ந்த பொருட்களினதும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்தல் என்பன போன்ற கரும விடயங்களை மதிப்பிட்டு கண்காணிப்பதன் ஊடாக புகைத்தலும் மற்றும் மதுபானம் அருந்துதலும் சம்பந்தமான தீமைகளை ஒழித்தல்
3. மக்களுக்கும் மற்றும் குறிப்பாக சிறுவர்களுக்கும் புகையிலை சார்ந்த உற்பத்திகள் மற்றும் மதுசாரம் சார்ந்த உற்பத்திகள் என்பவற்றுக்காக அவர்களுக்கு இருக்கின்ற பிரவேசத்தை குறைத்து மக்களையும் மற்றும் சிறுவர்களையும் புகைக்கும் அல்லது மதுபானம் அருந்தும் பழக்கத்திலிருந்து விடுபடச் செய்து, அத்தகைய பழக்கத்தை ஒழிப்பதற்கு தேவையான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

இலங்கையில் புகையிலையின் பாவனையையும் மற்றும் மதுசாரத்தின் பாவனையையும் கட்டுப்படுத்துவது தொடர்பில் வலிமையான ஒரு அரசியல் பொறுப்பு இருக்கின்றது. ஆகையால், தீங்கு தரும் புகையிலையையும் மற்றும் மதுசாரங்களையும் கட்டுப்படுத்துவதற்கு முதலில் நாடு சில கண்டிப்பான கொள்கைகளை கொண்டிருக்க வேண்டும் என கருதப்படுகின்றது. இந்த பு.ம.தே.அ.ச. போதை வஸ்துகள் மற்றும் அபாயகரமான ஔதடங்கள் பற்றிய ஜனாபதி சிறப்பு செயலணியின் ஆலோசனையில், புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையை கட்டுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு துல்லியமாக பங்களித்து வருகின்றது.

தொழிற்பாடுகள்:

- புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய கொள்கையை அமுலாக்குவது தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- ஊடக அனுசரணைகள் மற்றும் சமுதாய மைய கருத் திட்டங்கள் என்பவற்றின் ஊடாக சுகாதார மேம்பாட்டிற்கு உதவுதல் மற்றும் சுகாதார மேம்பாட்டை ஊக்குவித்தல்.
- புகையிலை சார்ந்த உற்பத்திகளையும் மற்றும் மதுசாரம் சார்ந்த உற்பத்திகளையும் நுகர்வதால் ஏற்படும் தீங்குகளை குறைப்பதற்கான பரிகார நடவடிக்கைகளை சிபாரிசு செய்தல்.
- சட்டமுறையற்ற மருந்துகளின் பாவனையை குறைப்பதற்காக அல்லது ஒழிப்பதற்காக தேசிய அபாயகர ஔதடங்கள் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனையில் அத்தகைய சட்டமுறையற்ற மருந்துகளின் பாவனைக்கு எதிரான பரிகார நடவடிக்கைகளை சிபாரிசு செய்தல்.
- புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய கொள்கை அமுலாக்கத்திற்கு தேவையான சட்டம், வரி விதிப்பு சார்ந்த நடவடிக்கைகளையும் மற்றும் நிருவாகம் சார்ந்த நடவடிக்கைகளையும் அதே நேரம் ஏனைய நடவடிக்கைகளையும் சிபாரிசு செய்தல்.
- அத்தகைய கொள்கையின் அமுலாக்கலை மதிப்பிடுதல் மற்றும் கண்காணித்தல்.
- கொள்கை சார்ந்த நடவடிக்கைகளின் தாக்கங்களை மதிப்பிட்டு, தேவை ஏற்படலாம் என்றவாறு அத்தகைய கொள்கைக்கான அத்தகைய திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடங்கள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு உதவுதல் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.
- புகையிலை சார்ந்த பொருட்களினதும் மற்றும் மதுசாரம் சார்ந்த பொருட்களினதும் உற்பத்தி, நுகர்வு மற்றும் சந்தைப்படுத்தல் முதலிய செயற்பாடுகளுடன் சம்பந்தப்படுகின்ற பொருளாதார, சுகாதார விடயங்களையும் மற்றும் ஏனைய விடயங்களையும் கண்காணித்தல்.
- புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையுடன் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், அத்தகைய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் அவற்றை ஒருங்கிணைத்தல்.
- புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய கொள்கையின் அமுலாக்கத்தில் சகல தேவையான அரச நிறுவனங்களையும், அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களையும், மற்றும் தனியார் துறை நிறுவனங்களையும் பங்குபற்ற செய்யதல்.
- புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய கொள்கை அமுலாக்கல் மற்றும் கண்காணித்தல் நடவடிக்கைகளில் காத்திரமான பொது மக்கள் பங்குபற்றலை ஊக்குவித்தல்.
- புகையிலையும் மற்றும் மதுசாரமும் தொடர்பான பிரச்சினைகள் பற்றி மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை பெற்று, அது தொடர்பில் அமுலாக்கல் நிறுவனங்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சிபாரிசு செய்தல்.

- அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் புகையிலை சார்ந்த பொருட்களினதும் மற்றும் மதுசாரம் சார்ந்த பொருட்களினதும் உற்பத்தியிலிருந்தும் மற்றும் நுகர்விலிருந்தும் தீங்குகளை குறைப்பது தொடர்பில் தொழிற்படும் நிறுவனங்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் முகவராண்மையாக தொழிற்படுதல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் ஆகியன தொடர்பாக மேற்கொள்ளப்படும் சகல விசாரணைகளினதும் முன்னேற்றத்தை கண்காணித்தல்.
- புகையிலை மற்றும் மதுசாரம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக உள்ளூர், பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

முக்கியமான அதிகாரிகள் (KEY OFFICIALS)



2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் (2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம்) வரையான காலப் பகுதிற்கு பணிப்பாளர்கள் சபையில் பணியாற்றும் உறுப்பினர்கள்

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் (2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம்) வரையான காலப் பகுதிற்கு பணிப்பாளர்கள் சபையில் பணியாற்றும் உறுப்பினர்கள் பற்றிய விபரம்

டாக்டர் பாலித்த அபேகோன் - தலைவர்
திரு குமார் ஏக்கரட்ன - மேலதிக செயலாளர், நீதி அமைச்சு, இலங்கை
திரு எச்.யூ. பிரேமதிலக்க - மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு
டாக்டர் லக்சுமி சி. சோமதுங்க - பிரதி பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்), சுகாதார மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு
திரு எச்.பி. பண்டார - சிரேஷ்ட உதவி செயலாளர், ஊடக மற்றும் தகவல் அமைச்சு
திருமதி கே. பியரட்ன - மேலதிக செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
கலாநிதி கே.ஏ.எஸ். கீரகல - மேலதிக செயலாளர், இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
பேராசிரியர் ரவீந்திர பெர்னாந்து - தலைவர், தேசிய அபாயகர ஒளதடங்கள் கட்டுப்பாட்டு சபை
திருமதி ஹெலன் மீகஸ்முல்ல - கலால் வரி ஆணையாளர் நாயகம்
திரு சஜீவ மடவத்த - பிரதி பொலிஸ் மா அதிபர், இலங்கை
வணக்கத்திற்குரிய எல்ல குணவங்ச
டாக்டர் நெவில் பெர்னாந்து
டாக்டர் உபுல் குணசேக்கர

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப் பகுதிற்கு பணிப்பாளர்கள் சபையில் பணியாற்றிய உறுப்பினர்கள் பற்றிய விபரம்

டாக்டர் பாலித்த அபேகோன் - தலைவர்
திரு குமார் ஏக்கரட்ன - மேலதிக செயலாளர், நீதி அமைச்சு, இலங்கை
திரு எச்.யூ. பிரேமதிலக்க - மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு
டாக்டர் லக்சுமி சி. சோமதுங்க - பிரதி பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்), சுகாதார மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு
திரு ஏம்.பி. பண்டார - சிரேஷ்ட உதவி செயலாளர், ஊடக மற்றும் தகவல் அமைச்சு
திரு டீ.சி.என்.ஏ. குமாரசிங்க - பணிப்பாளர் (திட்டமிடல்), கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு
திரு சுதீர ஜயரத்ன - பணிப்பாளர் (சிறு தொழில் முயற்சிகள்), இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
டாக்டர் நிலங்க சமரசிங்க / பேராசிரியர் ரவீந்திர பெர்னாந்து - தலைவர், தேசிய அபாயகர ஔதடங்கள் கட்டுப்பாட்டு சபை
திரு எல்.கே.ஜி. குணவர்த்தன - கலால் வரி ஆணையாளர் நாயகம்
திரு எல்.பி.எஸ்.பி. சந்துன்கஹவத்த - சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இலங்கை
திரு இந்திர த சில்வா - இலங்கை முன்னாள் பொலிஸ் மா அதிபர்
வணக்கத்திற்குரிய எல்ல குணவங்ச
டாக்டர் லலித் சந்திரதாச

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபையின் ஊழியர்கள் பற்றிய விபரம்

பொது முகாமையாளர் - டாக்டர் டியுர்லின் அபேநாயக்க
கணக்காளர் - அனுஷிகா கோரலகே
நிருவாக உத்தியோகத்தர் - உதேஷிக்கா குணரத்ன
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - நிவரத்ன, பிரசன்ன குமார
முகாமைத்துவ உதவியாளர் - சியாமலி அளுத்கமகே
துணை ஊழியர்கள் - துஷார முணசிங்க
சிந்தக்க ஹேரத்
ஜீத் பத்தும் சுபசிங்க
புத்திக்க ஹேரத்

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபைக்கான முக்கிய ஆலோசகர்கள் பற்றிய விபரம்

பேராசிரியர் காலோ பொன்சேக்கா
பேராசிரியர் தியனாத் சமரசிங்க
டாக்டர் சம்பிக்க விக்ரமசிங்க
டாக்டர் சரத் அமுனுகம
டாக்டர் சித்ரமலி த சில்வா
டாக்டர் வி.ரீ.எஸ்.கே. ஸ்ரீவர்த்தன
டாக்டர் ரொஹான் ரட்நாயக்க
டாக்டர் சுதத் சமரவீர
டாக்டர் மஹேஸ் ராஜசூரிய
டாக்டர் அமிதா பெர்னாந்து
பேராசிரியர் நாரத வர்ணசூரிய
டாக்டர் ஜயமால் த சில்வா
டாக்டர் கனேஷன் மஹேசன்
டாக்டர் ரஜீவ ரணவீர
டாக்டர் சமந்த கித்தலவஆராச்சி
திரு அஜித் ரோஹன
திரு புபுது சுமனசேக்கர

புகையிலையை கட்டுப்படுத்துவது தொடர்பான உ.சு.ஸ். வேலைச்சட்டக சமவாயம்

புகையிலையை கட்டுப்படுத்துவது தொடர்பான இந்த வேலைச்சட்டக சமவாயம் (FCTC) 2003 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற ஐம்பத்து ஆறாவது உலக சுகாதார பேரவை கூட்டத்தில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் 191 உறுப்பு நாடுகளினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த FCTC தான் பொது சுகாதாரம் தொடர்பான முதலாவது உலகலாவிய சமவாய உடன்படிக்கையாகும். புகையினால் ஏற்படும் கொள்கை நோய்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் உலக நாடுகளின் கவனம் திரும்பியதையடுத்து இந்த சமவாயம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இது சர்வதேச சுகாதார கூட்டுறவுக்கான ஒரு சட்ட சாசனத்தை உள்ளடக்கியிருக்கின்றது. இது வர்த்தக புரட்சி, நேரடி வெளிநாட்டு முதலீடு, புகையிலை தொடர்பான விளம்பரம் மற்றும் எல்லை நாடுகளை ஊக்குவித்தல் போன்ற காரண விடயங்களை அடையாளப்படுத்துகின்றது.

இலங்கை 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி உ.சு.ஸ். FCTC சமவாயத்தில் கைச்சாத்திட்டு, அதனை 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் திகதி அமுலாக்காக ஒப்புக் கொண்டது. அதனையடுத்து இலங்கை ஆசியாவில் முதல் உறுப்பு நாடாக மாறியது. இலங்கை இந்த உ.சு.ஸ். FCTC சமவாயத்தை ஒப்புக் கொண்ட உலக நாடுகளில் நான்காவது நாடாகும்.

உ.சு.ஸ். அதன் உறுப்பு நாடுகளுக்கு இந்த உ.சு.ஸ். FCTC சமவாயத்தின் கீழ் காணப்படுகின்ற சட்டமுறையான கடப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் உதவும் பொருட்டு ஆறு வகை சான்று அடிப்படையிலான புகைத்தலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளடங்கிய MPOWER எனும் பொதியை அறிமுகப்படுத்தியது. இலங்கையில் புகைத்தலை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் இந்த MPOWER பொதிக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

mPowEr	புகையிலையின் பாவனையை கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் கொள்கைகள்
	புகையிலை சார்ந்த பொருட்களின் பாவனையிலிருந்து மக்களை பாதுகாத்தல்
	புகையிலையின் பாவனையிலிருந்து விடுபடும் பொருட்டு மக்களுக்கு உதவுதல்
	புகையிலையின் பாவனையினால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி எச்சரித்தல்
	புகையிலை தொடர்பான விளம்பரம், ஊக்குவிப்பு மற்றும் அனுசரணை என்பவற்றை தடை செய்வதற்கான சட்டங்களை அமுலாக்கல்


මහින් පෙර
සවිමත් රටක්

குறிக்கோள் 1:
பொது சுகாதாரத்தை பாதுகாக்கக் கூடிய கொள்கைகளை இனங்காணுதல்

දුම්කොළ හා මද්‍යසාර පිළිබඳ ජාතික අධිකාරිය
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரச்சபை
National Authority on Tobacco & Alcohol

புகையிலைக்கு எதிரான வரிகளை அதிகரித்தல்

இலங்கையில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக கிரயங்களை மதிப்பிடும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட (2015) சுகாதார தலையீட்டு தொழில் நுட்ப மதிப்பீட்டு (HITA) ஆய்விலிருந்து கிடைத்த ஆதாரத்தையும் மற்றும் உ.சு.ஸ். வரி நிபுணர்களிடமிருந்து கிடைத்த நிபணத்துவம் வாய்ந்த சிபாரிசுகளையும் அடிப்படையாக கொண்டு, பு.ம.தே.அ.ச. புகையிலைக்கு எதிரான வரியை அதிகரிக்கும் பொருட்டு, நிதி அமைச்சின் பொருத்தமான அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தது. புகையிலைக்கு எதிரான வரியை அதிகரிக்கும் பிரேரணை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற புகையிலை பாவனையற்ற உலக தின கொண்டாட்டங்கள் வைபவத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் மற்றும் கௌரவ சுகாதார அமைச்சருக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்கம் சிகரட்டுகள் மீதான வரியை ஒழுங்குறுத்துகின்றது. எனினும், சிகரட்டுக்களின் விலையை ஒழுங்குறுத்துவதில்லை. புகையிலைக்கு எதிராக அதிகரித்த வரி விதிப்பானது குறை வருமானமுடைய மக்களுக்கு மத்தியில் புகையிலையின் பாவனையை குறைக்கும் சான்றுகளை சுட்டிக் காட்டியுள்ளது. சிகட்டுக்கள் மீது வரிகளை விதிக்கும் ஒரு நியாயமான கொள்கை நடுத்தர கால அடிப்படையில் சிரட்டுக்களின் நுகர்வை குறைக்கும் குறிக்கோள்களை அடைவதற்கு உதவும் என்பதுடன் குறுங்கால அடிப்படையில் அரசாங்கத்தின் வருமானத்தையும் அதிகரிக்கும். புகையிலைக்கு எதிரான வரிகளை அதிகரிப்பதற்காக முன்மொழியப்பட்ட சிகரட்டுக்களின் விலைகளை அதிகரிக்கின்ற பிரேரணைகள் பின்வருமாறு காணப்பட்டன:

(1) சிகரட்டு விற்பனை மீது VAT வரியை அறிமுகப்படுத்துதல்
(2) கடந்த ஆண்டில் ஒரு சிகரட்டின் விலை விகிதமாக குறைந்திருந்த கலால் வரியின் குறித்த பெறுமானத்தை அதிகரித்து, உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் கலால் வரி எண்ணிக்கை, கலால் வரிக்கு இடையில் காணப்படும் வித்தியாசங்கள் மற்றும் கலால் வரி சார்ந்த தடைகள் என்பவற்றை குறைத்தல்
(3) வழமையான தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொ.உ.உ.) ஏற்படும் வருடாந்த அதிகரிப்பின் அடிப்படையில், அரசாங்கத்தின் கொள்கை முந்துரிமைகளுக்கு இணங்க சிகரட்டுக்களின் மீதான வரிகளில் வழமையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு முறையான மற்றும் ஒழுங்கான ஒரு முறையியலை பின்பற்றி வழமையான ஒரு அடிப்படையில் அதன் அமுலாக்கல் பற்றி கண்காணித்தல்

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினாலும் மற்றும் கௌர சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரட்ன அவர்களினாலும் வழங்கப்பட்ட வழிகாட்டல்களும் மற்றும் ஆதரவும்

வரி சார்ந்த திருத்தத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதில் கருவி சாதனங்களாக விளங்கின. இதன் பயனாக, சிகரட்டுகள் மீதான வரியில் ஒரு 70% அதிகரிப்பு (சிகரட்டுகள் மீதான VAT வரியில் ஒரு 15% அதிகரிப்பும், மற்றும் சிகரட்டு ஒன்றுக்கு சிகரட்டு உற்பத்தி வரியில் 5.00 ரூபா அதிகரிப்பும்) 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது. சிகரட்டுகள் மீது விதிக்கப்பட்ட செஸ் வரி கிலோகிராம் ஒன்றுக்கு ரூ.3000.00 (கி.கி. ஒன்றுக்கு 2000.00 ரூபாவிலிருந்து) வரை அதிகரிக்கப்பட்டது.

இந்த பு.ம.தே.அ.ச. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்படும் வகையில் வரி விதிப்பு அட்டவணையை தயாரித்து வெளியிடும். இந்த முயற்சியானது இலங்கையில் சிகரட்டுக்களின் மீது வரி விதித்தலை திணித்தது. இதுவே ஆசியாவில் மூன்றாவது உயர்ந்த வரி விதிப்பு. பு.ம.தே.அ.ச. தற்பொழுது இலங்கையில் தனித் தனியாக சிகரட்டுக்கள் விற்பனை செய்யப்படுவதை தடை செய்வதற்கான நடபடிமுறையை முன்னெடுத்துள்ளது.

"2015 ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியில் நான் ஜனாதிபதியாக பதவியேற்ற நேரத்திலிருந்து, புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் கட்டுப்படுத்தும் விடயத்திற்கு எனது தேசிய கரும நிகழ்ச்சி நிரலில் முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. நாம் புகையிலைக்கு எதிரான வரி விதிப்பு சார்ந்த கொள்கைகளை மீளாய்வு செய்ததால், ஒரு மாதத்திற்கு முன்னர் எம்மால் புகையிலைக்கு எதிரான வரிகளை ஏறக்குறைய 10% வீதத்தால் அதிகரிக்க முடிந்துள்ளது. எனது சுகாதார அமைச்சர் சம பொதியிடும் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசித்து வருகின்றார்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன
முக்கிய உரை - இந்தியாவில் (2016 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் திகதி) நடைபெற்ற
புகையிலையை கட்டுப்படுத்துவது பற்றிய உ.சு.ஸ். வேலைச்சட்டக சமவாயத்திற்கான (FCTC)
தரப்புகள் மாநாட்டின் ஏழாவது அமர்வு கூட்டம்.

சட்ட நடவடிக்கை

பு.ம.தே.அ.ச. 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை சட்டத்தின் 35 ஆம் பிரிவு மீறப்பட்டமை தொடர்பில் "ஆதரனீய கதாவக்" என்ற திறைப்படத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுத்தது. வழக்கு இலக்கம்: 55038/3.

பு.ம.தே.அ.ச. சட்டத்தின் குறித்த சட்டஏற்பாடுகளை மீறுகின்ற அந்தத் திறைப்படத்திற்கு அங்கீகாரத்தை வழங்குவதை தவிர்க்கும் வகையில் தணிப்பு சபைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. இது ஆதரனீய கதாவக் என்ற திறைப்படத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் தொடரப்பட்டது. புகையிலையும் மற்றும் மதுசாரமும் பற்றிய விளம்பரங்கள் தொடர்பாக ஒரு சட்ட முன்மாதிரியைப் பெற்றுக் கொள்வது இந்த

வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் நோக்கமாகும். நாம் இந்த வழக்கில் வெற்றி பெற்றால், அத்தகைய திறைப்படத்திற்கு தணிப்பு சபையினால் அங்கீகாரத்தை வழங்க முடியாது.

பு.ம.தே.அ.ச. சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகளும் குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்படுவதற்கு எதிராக தமது அந்தந்த பகுதிகளில் வழக்குகளை தாக்கல் செய்து வருகின்றார்கள்.

COP7

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இந்தியாவின் புது தில்லியில் நடைபெற்ற குறித்த சமவாயத்திற்கான தரப்புகள் (COP7) மாநாட்டின் ஏழாவது அமர்வு கூட்டத்தில் பு.ம.தே.அ.ச. இன் ஒரு பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டது. அபிவிருத்தி, மனித உரிமைகள், பால்நிலை மற்றும் சர்வதேச கூட்டுறவுகள் என்பன அடங்கிய பல பிரிவுகளில் உ.சு.ஸ். CFTC தொடர்பான பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இந்த மாநாட்டில் முக்கிய உரையை நிகழ்த்திய மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் உலக நாடுகளின் தலைவர்களை புகையிலை கைத்தொழிலுக்கு எதிராக உறுதியாக நிற்குமாறும், அதே நேரம் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்படுத்தி, அதனூடாக புகையிலையையும் மற்றும் அதன் பாவனையையும் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்கள்.



"புலையிலை கைத்தொழில் தரப்புகள் பல வழிகளிலும் கொள்கை ஆக்குநர்களுக்கு அழுத்தம் கொடுப்பதையும், அரசாங்கத்தின் சட்டவாக்கத்தை எதிர்த்து அடிக்கடி மனுதாரர்களுக்கு ஆதரவளிப்பதையும் அதே நேரம் வெகுஜன ஊடகங்களை ஊக்குவிப்பதையும் நாம் அறிவோம். என்னை பொறுத்த வரையில், இதனை ஏதாவது ஒரு நாட்டின் உள்ளக ரீதியான கொள்கை விடயங்களில் நேரடியான ஒரு தலையீடாகவே கருதுகின்றேன். புகையிலை கைத்தொழில் தரப்புகளுக்கும் மற்றும் புகையிலை கைத்தொழிலுக்கும் நாம் எந்த விதத்திலும் கருசனை காட்ட வேண்டிய அவசியம் கிடையாது"

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய உரை - இந்தியாவில் (2016 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் திகதி) நடைபெற்ற புகையிலையை கட்டுப்படுத்துவது பற்றிய உ.சு.ஸ். வேலைச்சட்ட சமவாயத்திற்கான (FCTC) தரப்புகள் மாநாட்டின் ஏழாவது அமர்வு கூட்டம்.

புலையிலை உற்பத்திகளில் நிகழும் சட்டமுறையற்ற வர்த்தக செயற்பாடுகளை ஒழிப்பதற்கான FCTC சமவாயம்

பு.ம.தே.அ.ச. புகையிலை உற்பத்திகளில் நிகழும் சட்டமுறையற்ற வர்த்தக செயற்பாடுகள் பற்றிய ஒரு உப பிராந்திய வேலையரங்குகைள FCTC, உ.சு.ஸ்., சு.அ. மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுகள் என்பவற்றின் கூட்டொத்துழைப்பில் ஏற்பாடு செய்தது. பங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நோபளம், இலங்கை மற்றும் திமோர்-லெஸ்டே ஆகிய நாடுகளினது அரச பிரதிநிதிகள் இந்த வேலையரங்கில் கலந்து கொண்டனர். புகையிலை உற்பத்திகளில் நிகழும் சட்டமுறையற்ற வர்த்த செயற்பாடுகளை ஒழிப்பதற்கான கொள்கைகளை திட்டமிடுதல் மற்றும் தயாரித்தல் என்பவற்றுக்கு உதவும் வகையில், குறித்த சமவயாத்திற்கான தேவைப்பாடுகள் பற்றிய புரிந்துணர்வையும் மற்றும் விழிப்புணர்வையும் அதிகரிப்பதில் இந்த வேலையரங்கு இலக்குக் கொண்டிருந்தது.

2016 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 08 ஆம் திகதி, இலங்கை புகையிலை உற்பத்திகளில் நிகழும் சட்டமுறையற்ற வர்த்த செயற்பாடுகளை ஒழிக்கும் பொருட்டு இந்த FCTC சமவாயத்தை ஏற்று அங்கீகரித்தது. இவ்வாறு அங்கீகரித்ததால், இலங்கை தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் முதலாவது உ.சு.ஸ். உறுப்பு நாடாக மாறியது. அவ்வாறு செய்தமையால் இலங்கை உலக நாடுகளில் பதினான்காவது இடத்தை பெறுகின்றது. சர்வதேச ரீதியாக இடைமறித்து தேடும் ஒரு முறைமையையும் மற்றும் சர்வதேச கூட்டுறவுகளை இயலச் செய்யக் கூடிய சட்டவாக்கத்திற்கான பரிகார நடவடிக்கைகளையும் தாபித்து, புகையிலை விநியோக சங்கியிலும் அதே போன்று புகையிலை பொருட்களின் உற்பத்தி நடவடிக்கைகளிலும் நிகழும் சட்டமுறையற்ற செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பதற்கும் மற்றும் சட்டமுறையற்ற அத்தகைய வர்த்த செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் இந்த சமவாயம் கருவி சாதனங்களை வழங்குகின்றது.

"புகையிலை உற்பத்திகளில் நிகழும் சட்டமுறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக நாம் பாதுகாப்பளிப்பது எமக்கு இருக்கின்ற மற்றுமொரு சவால் விடயமாகும். குறிப்பாக புகையிலைக்கு எதிராக வரிகளை விதிக்கும் எமது கொள்கைகள், புகையிலையை கட்டுப்படுத்துவதற்கான எமது சட்டவாக்கங்கள் மற்றும் கொள்கைகள் என்பவற்றை நாம் வலுப்படுத்தும் போது இதனை மேலும் சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம். இது பொது சுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து தேசிய ரீதியில் புகையிலையை கட்டுப்படுத்தும் எமது தீர்க்கமான கொள்கைகளை பலவீனப்படுத்தி விடும்"

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன
முக்கிய உரை - இந்தியாவில் (2016 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் திகதி) நடைபெற்ற புகையிலையை கட்டுப்படுத்துவது பற்றிய உ.சு.ஸ். வேலைச்சட்டக சமவாயத்திற்கான (FCTC) தரப்புகள் மாநாட்டின் ஏழாவது அமர்வு கூட்டம்.



FCTC தாக்க மதிப்பீடு

பத்து ஆண்டுகளின் பின்னர் FCTC சமவாயம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த குறித்த சமவாயத்திற்கான தரப்புகளின் மாநாடு 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதன் ஐந்தாவது அமர்வு கூட்டத்தில், புகையிலையை கட்டுப்படுத்தும் பரிகார நடவடிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பான உ.சு.ஸ். FCTC சார்ந்த தாக்கத்தையும் மற்றும் புகையிலையின் நுகர்வையும் மற்றும் அதன் பாவனையையும் குறைப்பதற்கான ஒரு கருவி சாதனமாக அதன் பயன்தகு தன்மையையும் பற்றிய ஒரு ஒட்டுமொத்த மதிப்பீட்டை மேற்கொள்வதன் அவசியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த குறித்த தாக்க மதிப்பீட்டிற்கான பன்னிரெண்டு நாடுகளில் இலங்கையும் மதிப்பிடும் வகையில் ஒரு நாடாக தேர்ந்தெடுக்கப்பட்டது. பு.ம.தே.அ.ச., புகையிலையை கட்டுப்படுத்துவதில் அக்கறையுடைய பொருத்தமான தரப்புகளுடனும் மற்றும் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஆய்வை மேற்கொண்டு விஜயம் செய்த நிபுணர்கள் குழுவுடனும் கூட்டங்களை ஏற்பாடு செய்து, உ.சு.ஸ். கூட்டொத்துழைப்பில் இதற்கு ஆதரவு அளித்து.

படங்களின் மூலமாக சுகாதார தீங்கு எச்சரிக்கைகளை காட்சிப்படுத்தல்

சகல சிகரட்டு உறைகளிலும் 80% வீத அளவில் மேற்கூறப்பட்ட விதத்தில் சுகாதார தீங்கு எச்சரிக்கைகள் காட்சிப் படுத்தப்படுதல் வேண்டும் என கோரி சுகாதார அமைச்சு 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி ஒரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது. எனினும், பின்னர் புகையிலை கைத்தொழில் தரப்புகளினால் இந்த அறிவித்தலுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதன் காரணமாக, மூன்றரை வருடங்கள் வரை இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த தேவைப்பாடு சார்ந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவில்லை. சிகரட்டு உறையின் முன் பக்கத்திலும் மற்றும் பின் புறத்திலும் 60% அளவில் அத்தகைய சுகாதார தீங்கு எச்சரிக்கை காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் என குறித்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பு.ம.தே.அ.ச. இந்த விடயத்தில் சுகாதார அமைச்சுடன் மிக நெருங்கி தொழிற்பட்டது. சிகரட்டு உறையின் முன் பக்கத்திலும் மற்றும் பின் பக்கத்திலும் 80% வீத அளவில் சுகாதார தீங்கு எச்சரிக்கைகள் காட்சிப்படுத்தப்படும் வேண்டும் எனும் புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபையின் 2015 இன் 3 ஆம் இலக்க (திருத்தல்) சட்டம் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.



2016 ஆம் ஆண்டு யூன் மாதம், டென்மார்க்கின் கொபென்ஹெஜென் நகரில் நடைபெற்ற புகையிலை சம பொதியிடுகை திட்டம் பற்றிய தொழில் நுட்ப வேலையரங்கில் இலங்கை கலந்து கொண்டது. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில், ஜெனீவா உ.சு.ஸ். இரண்டு தொழில் நுட்ப நிபுணர்கள், சம பொதியிடுகை திட்டத்திலுள்ள முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடும் பொருட்டு அக்கறையுடைய தரப்புகளை சந்திப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்தனர். ஏற்கெனவே, சுமார் 11 நாடுகள் சிகரட்டுகளுக்கு சம பொதியிடும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன. பு.ம.தே.அ.ச. இலங்கையிலும் அவ்வாறான சம பொதியிடும் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான நடபடிமுறையை முன்னெடுத்துள்ளது. 2016 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில், இலங்கை புகையிலை உற்பத்திகள் பற்றி நாடுகளுக்கு இடையிலான ஒரு ஆலோசனை மற்றும் அறிவு பகிர்வு மாநாடு நிமித்தம் உ.சு.ஸ். தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அனுசரணை வழங்கி வரவழைத்தது. பிரேசில் போன்ற நாடுகள் புகையிலை உற்பத்தியை குறைத்து புகையிலைக்கு பதிலாக பிரதியீட்டு பயிர்களை அறிமுகப்படுத்துவதில் தமக்கிருந்த அனுபவத்தை இலங்கையுடன் பகிர்ந்து கொண்டன.

கண்காணிப்பும் மற்றும் மதிப்பீடும்

வழமையான மீளாய்வுக்கும் மற்றும் மதிப்பீட்டிற்குமான ஒரு முறைமை உருவாக்கப்பட்டு வருகின்றது. மாவட்டத்திலுள்ள பொது சுகாதார பரிசோதகர்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான ஒரு மாதிரிப் படிவமும் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது மீளாய்வு கூட்டம் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது.





பு.ம.தே.அ.ச. எதிர்நோக்கிய பல பிரச்சினை விடயங்களை இனங்காணும் பொருட்டும் மற்றும் மாவட்ட மட்டத்தில் புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான செயல் நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் தேவையான கட்டங்களை திட்டமிடும் பொருட்டும் சகல 26 மாவட்டங்களிலும் முக்கியமான நிருவாக அதிகாரிகளுடனும் மற்றும் தொழில் நுட்ப நிபுணர்களுடனும் திறமுறை ரீதியான ஆலோசனை சார்ந்த கூட்டங்களை நடத்தி வருகின்றது.




බොහොම → රෝග.
ඛවිවා → සොර.


ඇඩන් ලතුරු
ධර්ම ආකුරු

குறிக்கோள் 2:

புகையிலை சார்ந்த பொருட்களினதும் மற்றும் மதுசாரம் சார்ந்த பொருட்களினதும் உற்பத்தி, சந්தைப்படுத்தல் மற்றும் நுகர்தல் என்பன போன்ற கரும விடயங்களை மதிப்பிட்டு கண்காணிப்பதன் ஊடாக புகைத்தலும் மற்றும் மதுபானம் அருந்துதலும் சம்பந்தமான தீமைகளை ஒழித்தல்

சுகாதார தலையீட்டு தொழில் நுட்ப மதிப்பீட்டு ஆய்வு

பு.ம.தே.அ.ச. சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு, மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் என்பவற்றின் கூட்டொத்துழைப்பிலும், SEARO உ.சு.ஸ். சுகாதார பொருளாதார மற்றும் திட்டமிடல் பிரிவின் ஆதரவிலும், இலங்கையில் புகையிலையினதும் மற்றும் மதுபானத்தினதும் பாவனையினால் ஏற்படும் சமூக மற்றும் பொருளாதார கிரயங்களை மதிப்பிடும் பொருட்டு ஒரு சுகாதார தலையீட்டு தொழில் நுட்ப மதிப்பீட்டு (சு.த.தொ.நு.ம.) ஆய்வை நடத்தியது. புகையிலையினதும் மற்றும் மதுபானத்தினதும் பாவனையினால் ஏற்படும் அத்தகைய இரண்டு வகையான நேரடி மற்றும் மறைமுக கிரயங்கள் மதிப்பிடப்பட்டன. தாய்லாந்தின் பொது சுகாதார அமைச்சினது சுகாதார தலையீட்டு தொழில் நுட்ப மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து (சு.த.தொ.நு.ம.நி.தி.) கிடைக்கும் தொழில் நுட்ப உதவியுடன் இலங்கையிலுள்ள பொது சுகாதார மற்றும் பொருளியல் நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவினால் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதனால், இலங்கை ஆராய்ச்சியாளர்களின் சு.த.தொ.நு.ம. பற்றிய ஆற்றல் அதரிக்கப்படும். இந்த ஆய்வு இலங்கையில் புகையிலையும் மற்றும் மதுசாரமும் சம்பந்தப்பட்ட கிரயங்கள் மைய சுகாதார தலையீட்டு தொழில் நுட்ப மதிப்பீட்டு நவடிக்கைக்கும் பங்களிக்கும்.

இந்த சு.த.தொ.நு.ம. ஆய்வின் பெறுபேறுகள் அடங்கிய அறிக்கை மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் மற்றும் கௌரவ சுகாதார அமைச்சருக்கும் கையளிக்கப்பட்டன. இந்த ஆய்வின் முடிவுகள் ஊடகங்களில் பரந்தளவு விளம்பரப்படுத்தப்பட்டன. அது மட்டுமன்றி இலங்கையில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையை தடுப்பதற்கான அக்கறையுடைய தரப்புகளின் மூலமான வலிமையான ஒரு ஆதரவு பிரசார நடவடிக்கைக்கும் இந்த முடிவுகள் உறுதியான சான்றாகவும் அமைந்தன.





இலங்கையில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையினால் ஏற்படும் நேரடி மற்றும் மறைமுக கிரயங்கள் 2015: **ரூ.**209.03 **பில்லியன்** (1,548.37 **மில்லியன் அ.டொ.**)

மதுசாரத்தின் பாவனை சார்ந்த கிரயம் ரூ.119.66 **பில்லியன்** (886.37 **மில்லியன் அ.டொ.**)
புகையிலையின் பாவனை சார்ந்த கிரயம் ரூ.89.37 **பில்லியன்** (662.0 **மில்லியன் அ.டொ.**)

இந்த நிலையானது புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான வரிகளை அதிகரிக்கும் வகையில் சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சுக்கு தூண்டுதலாக அமைந்தது. அத்தகைய வரி தொடர்பான சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. இதுவே புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிராக ஒரு தனி ஆண்டு காலப் பகுதியில் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய வரி விதிப்பாகும். இது தவிர, பெறுமதி சேர்த்தல் வரியும் புகையிலை சார்ந்த உற்பத்திகளுக்கு எற்புடையதாக்கப்பட்டது. இந்த நடவடிக்கை சிகரட்டுக்களின் விலைகளில் கணிசமான அளவு அதிகரிப்புக்கு காரணமாக அமைந்தது. புகையிலை கம்பனிகள் இதனை தடுப்பதற்கு தடைகளை ஏற்படுத்தின. இத்தகைய தடைகளினால் பு.ம.தே.அ.ச. சட்டத்திற்கான திருத்தங்கள் தாமதமடைந்தன. இத்தகைய திருத்தங்களை துரிதப்படுத்துவதற்கும் மற்றும் புகையிலை சார்ந்த உற்பத்திகளை சம பொதியிடுதல் மற்றும் சிகரட்டுக்களை தனித்தனி சிகரட்டுக்களாக விற்பனை செய்வதை தடை செய்தல் ஆகியன தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிராக ஆதரவளிக்கும் தரப்புகளின் ஆதரவு பிரசார அமைப்புகளும் அவற்றின் அயராத ஆதரவை வழங்கின. 2020 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் புகையிலை உற்பத்தியை தடுப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இளைஞர்களின் புகைத்தல் பழக்கம் பற்றிய உலகலாவிய மதிப்பாய்வு (2015)

பு.ம.தே.அ.ச. 2015 ஆம் ஆண்டில் இளைஞர்களின் புகைத்தல் பழக்கம் பற்றி உலகலாவிய மதிப்பாய்வை (இ.பு.ப.உ.ம.) நடத்தியது. இந்த மதிப்பாய்வின் குறித்த தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு 2016 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டன. இந்த ஆய்வு ஆதரவுக்கும் மற்றும் செயல் நடவடிக்கைகக்கும் அதி சான்றாக விளங்குகின்றது. இந்த மதிப்பாய்வு இலங்கையில் நடத்தப்பட்ட அத்தகைய ஐந்து மதிப்பாய்வுத் தொடர்களில் (1999, 2003, 2007 மற்றும் 2011) இறுதியாக நடத்தப்பட்ட மதிப்பாய்வாகும். இந்த இ.பு.ப.உ.ம. தேசிய ரீதியில் பாடசாலைகளை பிரதிநிதிப்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு மதிப்பாய்வாகும். இந்த மதிப்பாய்வு பாடசாலைகளில் கல்வி கற்கின்ற 13 வயதுக்கும் மற்றும் 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு மத்தியில் காணப்படும் புகைத்தல் பழக்கம் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு ஒரு நியமப்படுத்தப்பட்ட அளவீட்டு சாதனத்தை பிரயோகிக்கின்றது. இந்த அளவீட்டு முறை உ.சு.ஸ். சகல பிராந்தியங்களையும் பிரதிநிதிப்படுத்துகின்ற நாடுகளின் கூட்டொத்துழைப்பில், நோய்களை கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் தடுப்பதற்குமான ஐக்கிய அமெரிக்க நிலையங்களின் புகைத்தலும் மற்றும் சுகாதாரமும் பற்றிய அலுவலகம் மற்றும் உ.சு.ஸ். புகையிலைக்கு எதிரான இயக்கம் என்பவற்றினால் தயாரிக்கப்பட்டது.

இந்த இ.பு.ப.உ.ம. புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனை, அத்தகைய பாவனை பற்றிய அறிவு மற்றும் மனோபாவங்கள், அத்தகைய பாவனைக்கான பிரவேசம், புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் கிடைப்புத் தன்மை என்பன அடங்கலாக முக்கியமான புகையிலை சார்ந்த சுட்டிகள் தொடர்பில் நாட்டின் குறித்த தரவுகளின் கண்காணிப்பு நடவடிக்கையை அனுமதிக்கின்ற உ.சு.ஸ். MPOWER ஊடாக உ.சு.ஸ். FCTC சமவாயத்தின் கீழ் நாடுகளுக்கு இருக்கின்ற அவற்றின் கடப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் அத்தகைய நாடுகளுக்கு துணையாக அமைகின்றது. இது 2011 ஆம் ஆண்டின் இ.பு.ப.உ.ம. பற்றிய பெறுபேறுகளுடன் ஒப்பிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டிய புகையிலையின் பாவனை சார்ந்த போக்கை அனுமதித்து, புகைத்தலை தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழிகாட்டும்.

2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இ.பு.ப.உ.ம. பெறுபேறுகள் இந்த வயது குழுவிலுள்ள சிறுவர்களினது புகையிலை சார்ந்த உற்பத்திகளின் ஒட்டுமொத்த பாவனையில் ஒரு வீழ்ச்சி காணப்படுவதாக சுட்டிக் காட்டின. ஆயினும், 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய இ.பு.ப.உ.ம. பெறுபேறுகளுடன் ஒப்பிடும் போது, அவை சிறுவர்களுக்கு புகையிலை சார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்வதை தடுப்பதற்கான சட்டங்கள் இல்லாததால் அத்தகைய உற்பத்திகளை சிறுவர்கள் நேரடியாக நுகர்வதற்கான பிரவேசம் அவர்களுக்கு இருந்ததாக சுட்டிக் காட்டின. குறித்த தரவுகள் வயது வந்தவர்களுக்கு மத்தியில் அதே நேரம் புகைத்தலை எதிர்க்கும் தரப்புகளுக்கும் மத்தியில் சிகரட்டுகளின் பாவனையினால் ஏற்படும் தீங்குகள் பற்றி சிறு வயதிலேயே பிரசாரம் செய்யும் தேவையையும் முன்மொழிந்தன.

13-15 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் தொடர்பான பெறுபேறுகள்	ஒட்டுமொத்தம் (%)	சிறுவர்கள் (%)	சிறுமியர்கள் (%)
புகையிலையின் பாவனை **புகைக்கப்படும் புகையிலை**			
• தற்போது புகையிலை புகைக்கும் நபர்கள்[1]	1.7	3.2	0.2
• தற்போது சிகரட்டு புகைக்கும் நபர்கள்[2]	1.5	2.9	0
• அடிக்கடி சிகரட்டு புகைக்கும் நபர்கள்[3]	0	0	0
• தற்போது ஏனைய புகையிலை உற்பத்திகளை புகைக்கும் நபர்கள்[4]	0.5	0.8	0.2
• எப்பொழுதாவது புகையிலை புகைக்கும் நபர்கள்[5]	6.8	10.9	2.7
• எப்பொழுதாவது சிகரட்டு புகைக்கும் நபர்கள்[6]	5.7	10.0	1.4
• எப்பொழுதாவது ஏனைய புகையிலை உற்பத்திகளை புகைக்கும் நபர்கள்[7]	2.5	3.4	1.5
புகைக்கப்படாத புகையிலை			
• தற்போது புகைக்கப்படாத புகையிலையை பாவிக்கும் பாவனையார்கள்[8]	2.4	4.2	0.5
• புகைக்கப்படாத புகையிலையை எப்பொழுதாவது பாவிக்கும் பாவனையாளர்கள்[9]	6.6	10.6	2.6
புகையிலை பாவனை (புகைக்கப்படும் மற்றும் / புகைக்கப்படாத புகையிலை			
• தற்போது புகையிலையை பாவிக்கும் பாவனையாளர்கள்[10]	3.7	6.7	0.7
• எப்பொழுதாவது புகையிலையை பாவிக்கும் பாவனையாளர்கள்[11]	11.1	17.4	4.9
பாதிக்கப்படும் தன்மை			
• புகையிலையை பாவிக்கும் பாவனையாளர்கள் எதிர்காலத்தில் ஒருபோதும் புகையிலையின் பாவனையால் பாதிக்கப்படாத தன்மை[12]	2.5	4.3	1.0
• ஒரு சிகரட்டை புகைத்து மகிழ்வதற்கு ஒரு போதும் எண்ணாத நபர்கள்[13]	6.4	7.8	5.2
புகைத்தலால் பாதிக்கப்படும் மூன்றாந்தரப்பினர்			
• வீட்டில் புகைப்பதால் பாதிக்கப்படும் தரப்பு	13.4	13.9	13.0
• ஏதாவது மூடிய பொது இடத்தினுள் புகைப்பதால் பாதிக்கப்படும் தரப்பு	35.7	39.6	31.7
• ஏதாவது திறந்த பொது இடத்தினுள் புகைப்பதால் பாதிக்கப்படும் தரப்பு	34.6	37.4	31.7
• பாடசாலைக்கு வெளியால் பாடசாலை கட்டிடங்களினுள் புகைக்கும் எவரேனும் நபரை பார்த்த மாணவர்கள்	30.1	36.6	23.6

13-15 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் தொடர்பான பெறுபேறுகள்	ஒட்டுமொத்தம் (%)	சிறுவர்கள் (%)	சிறுமியர்கள் (%)
ஊடகம் - புகையிலை கைத்தொழில் பற்றிய விளம்பரம்			
• விற்பனை நிலையங்களில் புகையிலை விளம்பரங்கள் அல்லது புகையிலை ஊக்குவிப்பு பற்றிய அறிவித்தல்[14]	44.6	47.5	41.6
• தொலைக் காட்சி விளம்பரங்களை, வீடியோக்களை அல்லது திரைப் படங்களை பார்த்து புகைக்கும் எவரேனும் நபரை பார்த்த மாணவர்கள்[15]	83.1	85.0	81.2
• புகையிலை கம்பனி பிரதிதிகளிடமிருந்து எப்பொழுதாவது சிகரட்டுகள் வழங்கப்பட்ட மாணவர்கள்	2.0	2.9	1.2
• சிகரட்டிலுள்ள ஏதாவது புகைத்தல் லோகோவை கண்டு தானாக புகைத்த மாணவர்கள்	2.9	3.8	1.9
புகையிலைக்கு எதிரான விளம்பரம்			
• ஊடகங்களில் வரும் புகையிலைக்கு எதிரான செய்திகள் அறிவித்தல்	88.0	88.5	87.6
• விளையாட்டு அல்லது சமுதாய நிகழ்ச்சிகளின் போது வரும் புகையிலைக்கு எதிரான செய்தி அறிவித்தல்[16]	57.9	59.0	56.3
• கடந்த 12 மாதங்களில் புகையிலையின் பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி பாடசாலையில் போதிக்கப்பட்ட மாணவர்கள்	78.9	76.3	81.5
அறிவும் மனோபாவங்களும்			
• யாராவது ஒருவர் புகையிலையை புகைக்கத் தொடங்கினால் நிறுத்துவது கஷ்டம் என திட்டவட்டமாக சிந்தித்த மாணவர்கள்	13.2	13.6	12.8
• கொண்டாட்டங்களின், களியாட்டங்களில், மற்றும் சமூக ஒன்றுகூடல்களில் புகையிலையை புகைப்பதால் மக்கள் அதிக சௌகரிகத்தை அனுபவிக்க உதவும் என சிந்தித்த மாணவர்கள்	23.9	26.3	21.5
• மற்றையவர்கள் புகையிலையை புகைப்பதால் தமக்கு தீங்கு ஏற்படும் என திடமாக சிந்தித்த மாணவர்கள்	86.2	82.8	89.6
• மூடிய பொது இடங்களினுள் புகைத்தலை தடைய செய்ய விரும்பும் மாணவர்கள்	96.4	95.7	97.3
• திறந்த பொது இடங்களினுள் பகைத்தலை தடை செய்ய விரும்பும் மாணவர்கள்	93.3	91.9	94.8

1. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் ஏதாவது ஒரு நேரத்தில் புகையிலை புகைக்கப்பட்டமை	9. புகைக்கப்படாத புகையிலை எப்பொழுதாவது பாவிக்கப்பட்டமை
2. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் சிகரட்டு புகைக்கப்பட்டமை	10. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் புகைக்கப்படும் புகையிலை ஏதாவது ஒரு நேரத்தில் புகைக்கப்பட்டமை மற்றும் / அல்லது புகைக்கப்படாத புகையிலை ஏதாவது ஒரு நேரத்தில் பாவிக்கப்பட்டமை
3. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் 20 அல்லது அதற்கு அதிக நாட்கள் சிகரட்டுக்கள் புகைக்கப்பட்டமை	11. புகைக்கப்படும் புகையிலை எப்பொழுதாவது புகைக்கப்பட்டமை மற்றும் / அல்லது புகைக்கப்படாத புகையிலை எப்பொழுதாவது பாவிக்கப்பட்டமை
4. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் சிகரட்டுக்கள் அல்லது பீடிகள் தவிர்ந்த ஏனைய புகையிலை உற்பத்திகள் புகைக்கப்பட்டமை	12. கடந்த 12 மாத காலப் பகுதியில் தமது நண்பர்களில் ஒருவர் தமக்கு சிகரட்டை வழங்கியதால் புகைத்து பாதிக்கப்பட்டமை தொடர்பில் 'திடமாக ஆம்' என அல்லது 'அநேகமாக ஆம்' அல்லது 'அநேகமாக இல்லை' என பதிலளித்தவர்கள் அடங்கலாக புகைத்தல் பாவனையால் எதிர்காலத்தில் பாதிக்கப்படும் மூன்றாந்தரப்பு
5. ஒன்றுக்கு அல்லது இரண்டிற்கு அதிகமான புகையிலை டம்முகளை எப்பொழுதாவது சுவைத்து பார்த்தமை	13.'நான் சிகரட்டு புகைத்திருக்கலாம் என நினைக்கின்றேன்' எனும் கூற்றுக்கு 'உடன்படும்' அல்லது 'கடுமையாக உடன்படும்' நபர்கள்
6. ஒன்றுக்கு அல்லது இரண்டிற்கு அதிகமான சிகரட்டு டம்முகளை எப்பொழுதாவது சுவைத்து பார்த்தமை	14. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில், சிகரட்டு விற்பனை நிலையங்களுக்கு விஜயம் செய்தவர்களுக்கு மத்தியில்
7. சிகரட்டு தவிர மற்றைய புகையிலைகளை ஒன்று அல்லது அதற்கு அதிகமான டம்முகளை எப்பொழுதாவது சுவைத்து பார்த்தமை	15. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் புகைத்தல் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களை அல்லது வீடியோக்களை அல்லது திரைப் படங்களை பார்த்தவர்களுக்கு மத்தியில்
8. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் ஏதாவது ஒரு நேரத்தில் புகைக்கப்படாத புகையிலை பாவிக்கப்பட்டமை	16. கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில் விளையாட்டு அல்லது சமூக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் மத்தியில்

*கடந்த 7 நாட்கள் காலப் பகுதியில்
**கடந்த 30 நாட்கள் காலப் பகுதியில்

புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனை பற்றி அரசாங்க ஊழியர்களுக்கு மத்தியிலான மதிப்பாய்வு

பு.ம.தே.அ.ச. செத்சிறிபாயவில் அமைந்துள்ள பல அரசாங்க திணைக்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மத்தியில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனை பற்றிய ஒரு மதிப்பாய்வை நடத்தியது. இது இந்த ஊழியர்களுக்கான ஒரு சுகாதார பரிசோதனை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் சுகாதார தீங்குகளை ஒழிக்கும் நோக்கில் உடலாரோக்கியத்துடன் வாழுகின்றவர்களுக்கான ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றினால் பின்பற்றப்பட்டது.

புகையிலை	மதுசாரம்
மதிப்பாய்வு செய்யப்பட்ட மொத்த நபர்கள்: ஆண்கள்: 202, பெண்கள்: 240	மதிப்பாய்வு செய்யப்பட்ட மொத்த நபர்கள்: ஆண்கள்: 202, பெண்கள்: 240
புகைக்கும் நபர்களின் தற்போதைய நிலை (கடந்த 30 நாட்களுக்குள்)	மதுபானம் அருந்துபவர்களின் தற்போதைய நிலை
ஆண்கள்: 24.7%	ஆண்கள்: 46.6%
பெண்கள், 0.4%	பெண்கள்: 1.2%
எப்பொழுதாவது புகைபிடித்தவர்கள்	**தமது வாழ் நாளில் ஆகக்குறைந்தது ஒரு தடவையேனும் மதுபானம் அருந்தியவர்கள்**
ஆண்கள்: 54%	ஆண்கள்: 74.8%
பெண்கள்: 2.1%	பெண்கள்: 5.8%
17 வயதுக்கும் மற்றும் 19 வயதுக்கும் இடைப்பட்ட புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஆரம்பித்த பெரும்பான்மையான பெண்கள்	17 வயதுக்கும் மற்றும் 19 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களின் மதுபான பாவனை ஆரம்பம்
கடந்த மாதத்தில் பாவித்த சிகரட்டுக்களின் சராசரி (ஆண்கள்)	**கடந்த இரண்டு மாதங்களாக மதுபான நுகர்வை மீண்டும் நினைவுபடுத்துதல் (பெண்கள்):**
ஒரு சிகரட்டுக்கு குறைந்த - 7.3%	இரண்டு கோப்பைகளுக்கு அதிக மதுபானம் - 26.6%
நாளொன்றுக்கு 1 சிகரட்டு - 8.3%	1-2 இடைப்பட்ட கோப்பை மதுபானம் - 24.4%
நாளொன்றுக்கு 2-5 சிகரட்டுக்கள் - 17.4%	நாளொன்றுக்கு ¼ கோப்பைக்கு குறைந்த மதுபானம் - 17%
நாளொன்றுக்கு 6-10 சிகரட்டுக்கள் - 4.6%	கடந்த மாத காலப் பகுதியில் 1-2 நாட்கள் மதுபானம் நுகர்ந்திருந்த பங்குபற்றுநர்கள் - 44.7%
நாளொன்றுக்கு 11-20 சிகரட்டுக்கள் - 3.7%	அதிகளவில் நுகரப்பட்ட மதுபான வகை (ஆண்கள்) சாராயம் (27.7%), பியரை நுகர்ந்த வீதம் - 17%
நாளொன்றுக்கு 20 இற்கு அதிகமான சிகரட்டுக்கள் - 4.6%	

முன்னோடி சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு மத்தியில் மதுபானத்தின் பாவனை தொடர்பான அறிவும் மற்றும் மனோபாவங்களும் பற்றிய மதிப்பாய்வு

ஆரம்ப சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு மத்தியில் மதுபானத்தின் பாவனை தொடர்பான அறிவும் மற்றும் மனோபாவங்களும் பற்றிய ஒரு மதிப்பாய்வு பு.ம.தே.அ.ச. மூலம் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த மதிப்பாய்வின் பெறுபேறுகள் மதுபானத்தின் பாவனையை தடுக்கும் செயற்பாடுகளை திட்டமிடுவதற்கும் மற்றும் சுகாதார பராமரிப்பு ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கும் உதவும்.

தோட்டத் துறையில் புகையிலை மற்றும் மதுசாரம் ஆகியவற்றின் பளு அளவு பற்றிய மதிப்பாய்வு

பு.ம.தே.அ.ச. நுவரெலியா, பதுளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு தேயிலைத் தோட்டங்களில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பளு அளவு பற்றிய ஒரு மதிப்பாய்வை மேற்கொண்டது. செல்வாக்கு செலுத்தும் காரணிகள் மற்றும் நுழைவுப் புள்ளிகள் என்பன தொடர்பில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் தலா நுகர்வு பற்றிய குறித்த தகவல்களை சேகரிப்பது இதன் முதலாவது குறிக்கோளாக காணப்பட்டது. மற்றைய குறிக்கோளாக காணப்பட்டது யாதெனில் 16 வயதுக்கும் மற்றும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்கள் ஆகியோருக்கு மத்தியில் காணப்படும் புகையிலை மற்றும் மதுபானம் சார்ந்த பாவனையை அளவிடுவதும் மற்றும் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகளை இனங்காணுவதும் ஆகும். 418 குடும்பங்களை உள்ளடக்கிய மாதிரியை தேர்ந்தெடுப்பதற்கு மேலெழுந்தவாரியான மாதிரி முறையியல் பிரயோகிக்கப்பட்டது. இது தவிர, தேவையான தகவல்களை சேகரிக்கும் பொருட்டு 25 கள உத்தியோகத்தர்களும், 12 ஒருமுகக் குழுக்களும் மற்றும் 14 சமூகத் தலைவர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். சேகரிக்கப்பட்ட அத்தகைய தகவல்கள் குடும்ப அடிப்படையிலான மதிப்பாய்வின் பெறுபேறுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டன.

புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனை சார்ந்த பளு தேசிய புள்ளி விபரங்களை விடவும் 3 மடங்குகள் பெரிதாக காணப்படுவதாகவும், சனத்தொகையில் அண்ணளவாக 10% வீதமானோர் நாளாந்தம் மதுபானத்தை நுகர்ந்ததாகவும், மற்றைய 10% வீதமானோர் வாரத்திற்கு கிட்டதட்ட 3-5 தடவைகள் மதுபானத்தை நுகர்ந்ததாகவும், மற்றும் பெண்களில் 3% - 5% வீதமானோர் நாளாந்தம் மதுபானத்தை நுகர்ந்ததாகவும் ஆய்வின் தரவுகள் சுட்டிக் காட்டின. புகையிலையை பொறுத்த வரையில், அதிகமான ஆண்கள் புகைப்பவர்களாகவும் மற்றும் அதிகமான பெண்கள் புகையிலையுடன் சேர்த்து

வெத்திலை மெல்லுபவர்களாகவும் காணப்படுகின்றனர். 16 வயதுக்கும் மற்றும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களுக்கு மத்தியில் மதுபானம் அருந்தும் பழக்கம் காணப்பட்டது. சிலர் 15 வயதிலேயே மதுபானத்தை அருந்த தொடங்குகின்றனர். குறைந்தளவு கல்வி அறிவு, பொழுதுபோக்கு வசதிகளின்மை, மற்றும் முதியோர்களுக்கு ஏனைய அமைப்புகளில் காலத்தை கழிப்பதற்கு வசதிகள் இல்லாமை மற்றும் ஏமாற்றம், இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு வசதிகள் இல்லாமை என்பன முதியோர்களும் மற்றும் இளைஞர்களும் மதுபானத்தின் பாவனைக்கு அடிமைப்படுவதற்கு முக்கிய காரணங்களாக இனங்காணப்பட்டன. நாளாந்தம் மதுபானத்தை அருந்துகின்ற ஒருவரின் ஆண்டொன்றுக்கான ஆகக்குறைந்த தலா மதுபான நுகர்வு 91.25 போத்தல்களாகும். கள்ளு பானத்தை பொறுத்தவரையில் இந்த அளவு ஏறக்குறைய 365 - 730 போத்தல்களாகும். அதே போன்று, நாளாந்தம் புகைக்கும் ஒருவர் வருடமொன்றுக்கு 1460 சிகரட்டுக்களை அல்லது 3650 பீடிகளை புகைப்பார். பு.ம.தே.ச.அ. தற்பொழுது தோட்டத் துறையிலுள்ள தோட்டம் தோட்டமாக இந்த பிரச்சினையை அடையாளப்படுத்தி வருகின்றது.


කාන්සේ බොන්න එපා.

குறிக்கோள் 3:

மக்களுக்கும் மற்றும் குறிப்பாக சிறுவர்களுக்கும் புகையிலை சார்ந்த உற்பத்திகள் மற்றும் மதுசாரம் சார்ந்த உற்பத்திகள் என்பவற்றுக்காக அவர்களுக்கு இருக்கின்ற பிரவேசத்தை குறைத்து மக்களையும் மற்றும் சிறுவர்களையும் புகைக்கும் அல்லது மதுபானம் அருந்தும் பழக்கத்திலிருந்து விடுபடச் செய்து, அத்தகைய பழக்கத்தை ஒழிப்பதற்கு தேவையான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

www.nata.gov.lk

குறிப்பாக இளைஞர்களை இலக்காகக் கொண்டு தகவல்களை பரம்பல் செய்யும் பொருட்டு பயனுள்ள ஒரு வழிமுறையாக புகையிலையினதும் மற்றும் மதுபானத்தினதும் பாவனையை தடுப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்தும் வகையில் புதிய பு.ம.தே.அ.ச. இணையத் தளம் உருவாக்கப்பட்டது.



புகைபிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்தும் செயல் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்துதல்

புகைபிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்தும் செயல் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டம் ஒரு முந்துரிமை விடயப் பிரிவாக இனங்காணப்பட்டுள்ளது. இந்த குறித்த நிகழ்ச்சித் திட்டம் முதல் முதலில் 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அனுராதபுர RDHS அலுவலகத்தில் தாபிக்கப்பட்டது. இது தொலைபேசி அழைப்பினூடாக இயங்குகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற புகைபிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்தும் (முற்றிலும் கட்டணம் இலவசமான தொலைபேசி அழைப்பு இலக்கம்: 1948) முறைமை உள்வரும் அழைப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்தும் மற்றும் இயங்கும் நேரத்தை மு.ப. 08.00 மணி முதல் பி.ப. 10.00 மணி வரை நீடித்தும் புதிய ஒரு மென்பாகத்தின் அறிமுகத்தை கொண்டு வலுப்படுத்தப்பட்டது. தற்பொழுது வெளிச் செல்லும் அழைப்பின் ஊடாக பின்னூட்டல் சேவைகளும் சாத்தியமானதாக காணப்படுகின்றன. எதிர்காலத்தில் சுழற்சி முறையில் சேவையை வழங்கும் பொருட்டு எம்மை இயலச் செய்யும் வகையில் நாம் புகைபிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்தும் குறித்த முறைமைக்காக தன்னார்வ ஆலோசனையாளர்களை உள்ளடக்கிய ஒரு வலையமைப்பை உருவாக்கும் நிமித்தம் அதிக ஆலோசனையாளர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிட்டு வருகின்றோம்.

புகைபிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான ஒரு ஆலோசனை பயிற்சி வேலையரங்கு வாசிங்டன் பல்கலைக்கழகத்தின் நிபுணர்களால் நடத்தப்பட்டது. உள மருத்துவ நிபுணர்கள், உள நல மருத்துவ அதிகாரிகள், மற்றும் உ.சு.ஸ். உறுப்பினர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், பல்கலைக்கழகங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இணைக்கப்பட்டுள்ள ஆலோசனையாளர்கள், உள நல சுகாதார க்ளினிக் பிரிவில் பணியாற்றுகின்ற தாதி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்த வேலையரங்கில் கலந்து கொண்டனர். உள மருத்துவ நிபுணர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குபற்றுநர்கள் ஆகியோர் இது போன்ற எதிர்கால வேலையரங்குகளுக்கு வள நபர்களாக இதனை முன்னெடுத்து செல்வார்கள்.

ஆலோசனை வழங்கும் திறன்கள் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் புகைபிடிக்கும் பழக்கத்தை கட்டுப்படுத்தும் குறித்த முறைமையில் சம்பந்தப்பட்டு பணியாற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்காக நடத்தப்பட்டது.

புகைத்தல் நீங்கிய கிராமங்களை தாபித்தல்

பு.ம.தே.அ.ச. சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் முதலியோரினதும் மற்றும் பொது மக்களினதும் பங்குபற்றலின் ஊடாக புகைத்தல் நீங்கிய கிராமங்களை தாபிப்பதற்கு பு.ம.தே.அ.ச. தனது ஆதரவை வழங்கியுள்ளது.











ஹக்மன: புகைத்தல் நீங்கிய ஒரு MHO பிரிவு

புகைத்தல் நீங்கிய ஒரு MHO பிரிவை தாபிக்கும் இலக்கு ஒரு பல பிரிவு அணுகுமுறையை பயன்படுத்தி அடையப்பட்டது. ஹக்மன MHO பிரிவு ஊழியர்கள் ஹக்மன பிரதேச சபைக்குரிய பிரதேச செயலாளர் அலுவலகம், ஹக்மன பொலிஸ் நிலையம், ஹக்மன சசனாரக்ஷக பள மண்டலய மற்றும் முலட்டியான வலய கல்வி அலுவலகம் என்பவற்றுடன் கூட்டிணைந்து தொழிற்பட்டனர். பு.ம.தே.அ.ச. மற்றும் மதுபானம், போதை வஸ்துக்கள் தகவல் நிலையம் (ம.போ.த.த.நி.) ஆகியன இத்தகைய ஊழியர்களுக்கும் மற்றும் குறித்த நிறுவனங்களுக்கும் துணைபுரிந்தன. உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சமுதாய மற்றும் சமய தலைவர்கள் ஆகியோரும் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கினர்.









புகைபிடிக்கும் நபர்கள், சிகரட்டுக்களை சில்லறையாகவும் மற்றும் மொத்தமாகவும் விற்பனை செய்யும் வியாபாரிகள், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள், இளம் வயதினர்கள் மற்றும் முற்சக்கர வண்டி சாரதிகள் ஆகிய தரப்புகளை இலக்காகக் கொண்டு அதிக பல சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சித் திட்டங்களின் அணவல் அளவை அதிகரிக்கும் நோக்கில் இரவு நேர கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டன. புகைத்தல் மற்றும் மதுசாரம் அருந்துதல் பழக்கத்திற்கு எதிரான ஒரு பவணி போன்ற பல செயற்பாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

பொது மக்களுக்கு சுகாதார கல்வி தொடர்பான செய்திகளை கிட்டச் செய்யும் பொருட்டு பாடசாலை மாணவர்கள் இரண்டாம் நிரல் போதனையாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஒரு மாத காலத்தின் பின்னர், ஒவ்வொரு கி.உ. பிரிவிலும் 10 குடும்பங்கள் என்ற அடிப்படையில் ஒரு மதிப்பாய்வும் மற்றும் வியாபார சமூகத்தினர் மைய மதிப்பாய்வும் என்ற மதிப்பாய்வு வழிகளின் மூலம் குறித்த நிகழ்ச்சித் திட்டம் மதிப்பிடப்பட்டது. 98% வீதத்திற்கும் அதிகமான வியாபாரிகள் புகையிலையையும் மற்றும் புகையிலை சம்பந்தப்பட்ட உற்பத்திகளையும் விற்பனை செய்வதை நிறுத்தியிருந்தனர் என இந்த மதிப்பாய்வுகளின் ஊடாக தெரிய வந்தது.

ஆற்றல் கட்டியெழுப்பல்

பு.ம.தே.அ.ச. சட்டம் உணவுகளையும் மற்றும் மருந்துகளையும் பரிசோதிக்கும் பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கலால் உத்தியோகத்தர்கள் முதலிய அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பு.ம.தே.அ.ச. தனது பு.ம.தே.அ.ச. சட்டத்தை பயனுள்ளதாகவும் மற்றும் முழுமையாக பரந்தளவிலும் செயற்படுத்துவதற்கு தன்னிடமுள்ள ஆற்றலை வலுப்படுத்தும் பொருட்டு தனது அந்த பு.ம.தே.அ.ச. சட்டம் அதே நேரம் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் சுகாதார தீங்குகள் என்பன பற்றிய தனது விழிப்புணர்வை அதகரிப்பதில் தொடர்ச்சியாக தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இந்த முயற்சியில், பு.ம.தே.அ.ச. அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் நீதிச் சேவை உத்தியோகத்தர்களுக்கும் பல வேலையரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தியது. இந்த வேலையரங்குகளில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் போது, குறித்த சட்டத்தை நமுறைபடுத்துவதில் எதிர்நோக்கக் கூடிய சவால்களும் அதே நேரம் சாத்தியமான பரிகார நடவடிக்கைகளும் இனங்காணப்பட்டன.











பு.ம.தே.அ.ச. McCabe நிலையத்தின் சர்வதேச நிபுணர்களுடன் இணைந்து பு.ம.தே.அ.ச. சட்டத்தை செயற்படுத்துவதற்கான பிரச்சினை விடயங்கள் பற்றி சகல மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் என ஒரு வேலையரங்கை நடத்தியது.





பு.ம.தே.அ.ச. அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கள மட்ட செயற்பாடுகளுக்கான அவர்களின் ஆதரவை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு ஹப்புத்தல, அளவ்வ மற்றும் குருனாகல் ஆகிய பிரதேச செயலக அலுவலகங்களின் ஊழியர்களுக்காகவும் மற்றும் வட மத்திய மாகாணத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்காகவும் (கெக்கிராவ, அனுராதபுரம் மற்றும் மதவாச்சி) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.





பு.ம.தே.அ.ச. களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் ஆயுர்வேத மருத்துவர்களுக்காக, சமூகத்தில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையை தடுப்பதற்கும் நிமித்தம் அவர்களை ஆதரவு வழங்க செய்யும் வகையில் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் மற்றும் மே மாதத்திலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் அவர்களின் ஆற்றலை கட்டியெழுப்பும் வேலையரங்குகளையும் நடத்தியது.

நடத்தப்பட்ட ஏனைய வேலையரங்கு நிகழ்ச்சித் திட்டங்களில் பின்வருவன அடங்குகின்றன.

- பொலிஸ் மா அதிபரின் அலுவலகத்திலுள்ள உயர் மட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட வேலையரங்கு மற்றும் மேல் மாகாணம், மற்றும் தென் மாகாணம் ஆகிய மாகாணங்களில் நடத்தப்பட்ட வேலையரங்கு.
- கேப் நரக பல்கலைக்கழக நிபுணர்களின் பங்குபற்றலுடன் புகையிலையை கட்டுப்படுத்துவதிலுள்ள பொருளாதார நன்மைகள் பற்றி நடத்தப்பட்ட வேலையரங்கு.
- இந்தியாவுக்கான ஆய்வு சற்றுலா:- இந்தியாவின் புது தில்லியில் நடைபெற்ற அறிவு பகிர்வு மற்றும் ஆற்றல் கட்டியெழுப்பதல் தொடர்பான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கச் செய்யும் பொருட்டு சுகாதார மருத்துவ அதிகாரிகளும் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய நபர்கள் பிராந்தியத்தின் மிக சிறந்த செயன்முறைகள் மற்றும் புகைத்தல் பழக்கத்தை கட்டுப்படுத்தும் ஒரு சேவையின் தொழிற்பாடு ஆகியன பற்றி கற்றுக் கொண்டனர்.

மாவட்ட வளநபர் குழுக்களின் அபிவிருத்தி

பு.ம.தே.அ.ச. ஏற்கெனவே காணப்படும் சுகாதார மற்றும் சமூக வளங்களை மாவட்ட மட்டத்தில் பயன்படுத்தி, ஆரம்ப பராமரிப்பு மட்டம் மற்றும் புனர்வாழ்வளித்தல் ஆகிய அடிப்படையில் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையை ஆரம்ப மட்டத்தில் தடுத்தல், அத்தகைய பழக்கத்தை கண்டுபிடித்தல், புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் பாவிக்கின்ற நபர்களை அத்தகைய பழக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் வகையில் ஆலோசனைகளை பெறுவதற்காக உரிய ஆலோசனை வழங்கும் தரப்புகளிடம் அனுப்பி வைத்தல் மற்றும் குணப்படுத்தும் சிகிச்சை முறைகள் என்பவற்றை அடையாளப்படுத்துகின்றதும் அதே நேரம் மதுபானத்தின் நுகர்வை அடையாளப்படுத்துகின்றதுமான நிலையான மற்றும் பரந்த முழுமையான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்து வருகின்றது.

பு.ம.தே.அ.ச. சுகாதார அமைச்சின் கூட்டொத்துழைப்பில், ஆரம்ப மட்ட சுகாதார பராமரிப்பு ஊழியர்களுக்கு அவர்களை புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையை தடுப்பதற்கு இயலச் செய்யும் வகையில் திறன் கட்டியெழுப்பல் வேலையரங்கு தொடர்களை ஏற்பாடு செய்து நடத்தியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையை தடுக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி அத்தகைய செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான ஒரு வள நபர் குழுவை உருவாக்குவது இதன் குறிக்கோளாகும். மருத்துவ உத்தியோகத்தர்கள்/தொற்றாத நோய்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்/உள நல மருத்துவ உத்தியோகத்தர்கள், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் (ஒரு மாவட்டத்திற்கு மூன்று தொடக்கம் நான்கு உத்தியோகத்தர்கள் என்ற வீதம்) பொது சுகாதார பரிசோதகர்கள், மற்றும் சுகாதார கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்த கள ரீதியான செயற்பாடுகளில் பயிற்றப்பட்டனர்.

குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடும் பொருட்டு, பு.ம.தே.அ.ச. சகல மாவட்டங்களையும் உள்ளக்கி, சுகாதார சேவைகளின் மாகாண பணிப்பாளர்கள், சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர்கள், மாகாணங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள சமுதாய மருத்துவ நிபுணர்கள், தொழில் நுட்ப மற்றும் நிருவாக உள்ளீட்டு தேவைகளை வழங்குவதற்காக வைத்தியசாலைகளிலுள்ள பணிப்பாளர்கள் மற்றும் உள நல மருத்துவ நிபணர்கள் ஆகியோரின் பங்குபற்றலில் மாகாண மட்டத்தில் ஆலோசனை சார்ந்த இரண்டு வேலையரங்குகளை நடத்தியது.

பு.ம.தே.அ.ச. புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் கட்டுப்படுத்துவது தொடர்பான நிபுணர்களுடன் ஒன்றிணைந்து ஊவா, சபரகமுவா மற்றும் மத்திய மாகாணங்களில் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்காக ஒரு பயிற்சி வேலையரங்கை நடத்தியது. 12 மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு மருத்து உத்தியோகத்தர்களுக்காக மூன்று வேலையரங்குகள் நடத்தப்பட்டன. நாட்டிலுள்ள ஏனைய பாகங்களையும் உள்ளடக்கி இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

சிறுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

சிறுவர்கள் புகையிலை கைத்தொழிலுக்கு இலக்காகும் மிக எளிதில் பாதிக்கக் கூடிய ஒரு தரப்பாகும். இளைஞர்கள் அவர்களின் ஆரம்ப வயதிலேயே புகைபிடிக்கும் பழக்கத்திற்கு அடிமைப்படுகின்றனர். அநேகமாக புகைபிடிக்கும் நபர்கள் அந்த புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வது அவர்களுக்கு கஷ்டமான விடயமாகும். இளைஞர்களுக்கு புகைபிடிப்பதிலுள்ள தீங்கான ஆபத்தான விளைவுகள் பற்றி அவர்களை விழிப்புணர செய்வதும் அதே நேரம் புகையிலை கைத்தொழிலின் ஒழுக்கவியலற்ற சந்தைப்படுத்தல் பற்றி இளைஞர்களுக்கு போதிப்பதும் மிக முக்கியமானதாகும்.





பு.ம.தே.அ.ச. கல்வி அமைச்சின் கூட்டொத்துழைப்பில், புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் சுகாதார ஆபத்துக்களில் குறிப்பாக ஒருமுகப்பட்டு பாடசாலை சிறுவர்களுக்கான பாடசாலை ரீதியில் பல சுகாதார ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.

சுகாதாரத்தின் மீது புகையிலையின் தீங்கான விளைவுகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்ட ஒரு கலை சார்ந்த போட்டியில் சகல மாகாணங்களிலுமுள்ள பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினர். வெற்றி பெற்ற பாடசாலை மாணவ மாணவிகளுக்கு புகையிலை அற்ற உலக தின கொண்டாட வைபவத்தின் போது மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



இளம் சந்ததியினருக்கான முக்கிய தகவல் வளமாக இருக்க வேண்டும் என இனங்காணப்பட்ட பெற்றோர்கள், மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், இலக்கு குழுக்கள் ஆகியோருக்காகவும் மற்றும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான ஒரு திறமுறைத் திட்டமாகவும் நடத்தப்பட்ட போட்டிற்கு இணையாக புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் சுகாதார தீங்குகள் விழிப்புணர்வு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டில், மூன்று மாவட்டங்களிலும் 2400 பாடசாலை மாணவ மாணவிகளும் மற்றும் அண்ணளவாக 1000 பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரும் இந்த விழிப்புணர்வு அமர்வுகளில் கலந்து கொண்டனர்.













பு.ம.தே.அ.ச. 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில், கம்பஹா மாவட்டத்தின் கிரிபத்கொட சாரணர் இயக்கத்தின் சாரணர்களுக்கான புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் தடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிட்டு நடத்தியது.

பு.ம.தே.அ.ச. தேசிய அபாயகர ஔதடங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் போதை வஸ்துக்களுக்கும் மற்றும் மதுபானத்திற்கும் எதிரான ஜனாதிபதி சிறப்பு செயலணி ஆகியவற்றின் கூட்டொத்துழைப்பில், 2016 ஆம் ஆண்டு யூலை மாதம், பொலன்னறுவை மாவட்டத்தில் இளம் தலைவர்களுக்கான ஒரு மூன்று நாள் பயிற்சி வேலையரங்கையும் நடத்தியது.


අපිට එපා
අපි සිගරට්
බොන්නෙ නෑ
දුම් බීමට විරුද්ධ වෙමු


මත් රකුසාව
ඇගෙනවාද?

புகைக்கப்படாத புகையிலை



புகைக்கப்படாத புகையிலைக்கு எதிரான கருத் திட்டக் குழு

டாக்டர் பாலித்த அபேகோன் (ஆலோசகர்)
பேராசிரியர் டப்ளியூ.எம். திலக்கரட்ன (தலைவர்)
டாக்டர் ஹேமந்த அமரசிங்க (கருத் திட்டத்தின் ஏற்பாட்டாளர்)
டாக்டர் உதய உஸ்கொடஆராச்சி (குழு உறுப்பினர்)
டாக்டர் நிலந்த ரத்நாயக்க (குழு உறுப்பினர்)
டாக்டர் சஜீவ ரணவீர (குழு உறுப்பினர்)
டாக்டர் சுரேஷ் சர்முகநாதன் (குழு உறுப்பினர்)
டாக்டர் கனிஷ்க த சில்வா (குழு உறுப்பினர்)
டாக்டர் உபுல் குணசேக்கர (குழு உறுப்பினர்)
பேராசிரியர் ருவன் ஜயசிங்க (குழு உறுப்பினர்)
டாக்டர் மன்ஜுல ஆட்டிகல (குழு உறுப்பினர்)

புகைக்கப்படாத புகையிலைக்கு எதிரான உப குழுவின் முக்கிய குறிக்கோள்கள்:

1. புகைக்கப்படாத புகையிலையின் (பு.பு.) பாவனையை கண்காணித்து அத்தகைய பாவனையை தடுப்பதற்கான கொள்கைகளை வகுத்தமைத்தல்
2. புகைக்கப்படாத புகையிலையின் பாவனையிலிருந்து இளைஞர்களை பாதுகாத்தல்
3. புகைக்கப்படாத புகையிலையின் பாவனைக்கு அடிமைப்படும் நபர்களை அதிலிருந்து விடுபடுவதற்கு உதவுதல்
4. புகைக்கப்படாத புகையிலையின் பாவனையினால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி எச்சரித்தல்
5. புகைக்கப்படாத புகையிலை உற்பத்தி, இறக்குமதி, புகையிலைக்கு பெறுமதி சேர்த்தல், விற்பனை செய்தல், விளம்பரம் செய்தல், ஊக்குவித்தல், மற்றும் அனுசரணை அளித்தல் என்பவற்றின் மீது தடைகளை விதித்தல்
6. புகைக்கப்படாத புகையிலைக்கான வரிகளை உயர்வடைய செய்தல் மற்றும் சிகரட்டுக்களின் அளவுக்கு விலைகளை அதிகரித்தல்
7. புகைக்கப்படாத புகையிலை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
8. புகைக்கப்படாத புகையிலை தொடர்பில் பு.ம.தே.அ.ச. இற்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கல் மற்றும் அந்த சபையினது புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான பிரசார நடவடிக்கைகளுக்கு உதவுதல்

புகைக்கப்படாத புகையிலைக்கு எதிரான உப குழு பின்வரும் செயற்பாடுகள் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

1. கொழும்பு பல்கலைக்கழகத்தின் உதவியுடனான வெத்திலை மெல்லுதல் மற்றும் புகைக்கப்படாத புகையிலை சம்பந்தப்பட்ட சட்டமுறையற்ற உற்பத்திகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய காரணிகளை ஆராய்வதற்கான ஒரு கணிய மதிப்பாய்வு.
2. வெரிட்டி ரசேர்ச் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் உதவியுடன் வரி விதித்தல் மற்றும் விலை ஒழுங்குறுத்தல் ஆகியன தொடர்பான ஒரு ஆராய்ச்சி மற்றும் கூட்டு கருத் திட்டம்.
3. புகைக்கப்படாத புகையிலை, சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் புகைக்கப்படாத புகையிலைக்கு எதிரான சாத்தியமான நடவடிக்கைகள் என்பன பற்றி வெளிநாட்டு நிபணர்களுடனான மாநாடு.
4. பல அக்கறையுடைய தரப்புகளுடன் புகைக்கப்படாத புகையிலைக்கு எதிரான பிரசார நடவடிக்கைள் மற்றும் உத்தேச சட்டவாக்கம் என்பன தொடர்பில் அவர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கான கூட்டங்கள்.
5. பு.ம.தே.அ.ச. மற்றும் பு.பு. உப குழு ஆகியன புகையிலை உற்பத்திகளை தடைசெய்வது தொடர்பான சட்ட ஒழுங்கவிதிகளை சட்டமாக நிறைவேற்றுவதில் வெற்றி கண்டன. அத்தகைய சட்டம் (2016 இன் 01 ஆம் இலக்க ஒழுங்குவிதி) 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது.
6. புகைக்கப்படாத புகையிலையை தடை செய்வது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்கள், கலால் உத்தியோகத்தர்கள், சுங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு.
7. மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் உருவாக்கப்பட்ட 'ப்ளூ பி குரல்' இயக்கங்கள் (பாதிக்கப்பட்ட குழுக்கள்) பல் விஞ்ஞான பீடம், பேராதெனிய மற்றும் இரத்தினபுரி மத்திய வைத்தியசாலை.
8. பொது மக்களை வலுவூட்டும் முகமாக இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல், பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் அடிப்படையிலான பிரசார நடவடிக்கைகள்.
9. புகைக்கப்படாத புகையிலை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள் பற்றிய ஊடக மாநாடுகள்.


අපි අවශ්‍යයි

முக்கிய நிகழ்ச்சிகள்

දුම්කොළ හා මද්‍යසාර පිළිබඳ ජාතික අධිකාරිය
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரச்சபை
National Authority on Tobacco & Alcohol

மதுபானம் அற்ற இலங்கையை நோக்கிய தேசிய மதுசாரம் பற்றிய உச்சி மாநாடு: 2016



பு.ம.தே.அ.ச. சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சினது உள நல மருத்துவ பிரிவின் கூட்டொத்துழைப்பில் 'மதுபானம் அற்ற இலங்கையை நோக்கி' என்ற தொணிப் பொருளின் கீழ் 2016 ஆம் ஆண்டு தேசிய மதுசாரம் பற்றிய உச்சி மாநாட்டை நடத்தியது. இந்த உச்சி மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் அனுசரணையில் நடத்தப்பட்டது. கௌரவ சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரட்ன மற்றும் ஜெனீவா உ.சு.ஸ். மதுபான பதார்த்தங்களின் பாவனைக்கு எதிரான முகாமைத்துவ தொழில் நுட்ப உத்தியோகத்தர் டக் ரெக்வே ஆகியோர் இந்த உச்சி மாநாட்டில் ஏனைய முக்கிய அதிகாரிகளாக கலந்து கொண்டனர்.


Towards an Alcohol Free Sri Lanka
මතින් නිදහස් ශ්‍රී ලංකාවක්
மதுபானம் அற்ற இலங்கையை நோக்கி





குறித்த உச்சி மாநாட்டிற்கு இணையாக, 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி மதுபானத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய கொள்கைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மதுபான உற்பத்திகளின் நிமித்தம் சகல வடிவங்களிலும் காணப்படும் ஊக்குவிப்பை ஒழித்தல், மதுபான வர்த்தகத்தின் வித்தியாசமான அம்சங்களுடன் தொடர்புடைய விலை நிர்ணயம், வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், மதுபானம் கிடைக்கும் சாத்தியத்தையும் மற்றும் மதுபானத்திற்கான பிரவேசத்தையும் குறைத்தல், தேசிய கொள்கை மீது வரும் மதுபான கைத்தொழிலின் தலையீடுகளை தடுத்தல், மற்றும் மக்களிடமிருந்து கிடைக்கும் உதவியை கொண்டு, துணை சேவைகளையும் மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளையும் வலுப்படுத்துதல் என்பன குறித்த கொள்கையின் முக்கிய குறிக்கோள்களாகும். இலங்கையே புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் கட்டுப்படுத்துவதற்கான தேசிய கொள்கைகளை கொண்டிருக்கின்ற ஒரேயொரு நாடாகும். இதே நேரம் ஏனைய நாடுகள் புகையிலையை மட்டும் கட்டுப்படுத்துவதற்கான தேசிய கொள்கைகளை கொண்டுள்ளது.







குறித்த உச்சி மாநாட்டிற்கு முன்னர், அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஒரு ஊடக மாநாடு நடத்தப்பட்டது. இந்த ஊடக மாநாடு பொது மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டிய பல முக்கியமான செய்திகளை அனுமதித்து, குறித்த நிகழ்வுக்கான பரந்த ஊடக விளம்பரத்தை உறுதிசெய்தது.

SLMA வருடாந்த சுகாதார ஓட்டமும் மற்றும் நடையும் (நடமாடும் நிகழ்ச்சித் திட்டம்) 2017

இலங்கை மருத்துவர் சங்கம் 'ஆரோக்கியமான வாழ்வுக்கு தூய வளி' எனும் கருப்பொருளின் கீழ் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி BMICH மண்டபத்தில் தனது வருடாந்த நடமாடும் சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியது.

கொண்டாடப்படும் புகையிலை அற்ற உலக தினம் (மே மாதம் 31 ஆம் திகதி), உலக சுற்றாடல் தினம் (யூன் மாதம் 15 ஆம் திகதி), மற்றும் உலக ஆஸ்த்மா தினம் (மே மாதம் 02 ஆம் திகதி) ஆகிய கொண்டாட்ட தினங்களை முன்னிட்டு இந்த நிகழ்வு இலங்கை புள்மொனொலொஜிஸ்ட் கல்லூரியின் கூட்டொத்துழைப்பில் நடத்தப்பட்டது. புகைபிடிப்பதால் நுரையீரலுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அடங்கலாக, உடல் ஆரோக்கியத்தின் மீது வளி மாசடைவின் பாதகமான விளைவுகளுக்கு கவனத்தை ஈர்த்து, பொது மக்களுக்கு ஒரு ஆரோக்கியமான வாழ்வுக்கான 'தூய வளி' எனும் எண்ணக்கருவை ஊக்குவிக்கும் வகையில் கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தாழ்மையான புதிய ஒரு முறையில் மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான செய்திகளை அனுப்புவதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு கண்காட்சிக் கொட்டகை மற்றும் காத்திரமான வீதி நாடகம் ஆகியவற்றின் ஊடாக பொது மக்களுக்கும் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கும் மத்தியில் புகையிலையினது பாவனையினால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு பு.ம.தே.அ.ச. இந்த வாய்ப்பை பயன்படுத்தியது.





புகையிலை அற்ற உலக தின விருது



உலக சுகாதார ஸ்தாபனம் 2015 ஆம் ஆண்டிற்கான புகையிலை அற்ற உலக தினத்தின் விருது பெறுநராக கௌரவ சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரட்ன அவர்களை தேர்ந்தெடுத்தது. இந்த விருது 2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 24 ஆம் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் கௌரவ சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரட்ன அவர்களுக்கு வழங்கப்பட்டது.

'புகையிலை அற்ற உலக தின' கொண்டாட்டம் புகையிலை சம்பந்தப்பட்ட பல கருப்பொருட்களின் கீழ் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த கொண்டாட்ட தினத்தில், உலக சுகாதார ஸ்தாபனம் (உ.சு.ஸ்.) ஆறு உ.சு.ஸ். பிராந்தியங்களலிருந்து தனியாட்களை அல்லது நிறுவனங்களை அந்தத் தரப்புகள் புகையிலையை கட்டுப்படுத்தும் அம்சத்தில் அடைந்த சாதனைகளை மதித்து கௌரவிக்கின்றது.

தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்தின் உ.சு.ஸ். பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பூனம் கெத்ரபாள் சிங் கௌரவ அமைச்சரை அவர் மதிப்பு மிகு புகையிலை அற்ற உல தின விருதை பெற்றதற்காக பாராட்டினார். இலங்கை புகையிலையை கட்டுப்படுத்துவதில் தான் அடைந்த சாதனைகளையும் மற்றும் புகையிலையை கட்டுப்படுத்துவதற்கு எதிரான உலகலாவிய வேலைச்சட்டக குறிக்கோள்களின் முன்னேற்றத்தை நோக்கி இலங்கை நல்கிய பங்களிப்பையும் மதித்து இந்த விருது இலங்கைக்கு வழங்கப்பட்டதாகவும், அதே நேரம் மிக முக்கியமாக புகையிலையின் கடுமையான பொது சுகாதார ஆபத்துக்களை குறைக்கும் நோக்கிலான நடவடிக்கையில் டாக்டர் ராஜித்த சேனாரட்ன அவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சிகளை மதித்தும் பாராட்டியும் இந்த விருது வழங்கப்பட்டது எனவும் பிராந்திய பணிப்பாளர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையை புகையிலையினதும் மதுசாரத்தினதும் பாவனை நீங்கி நிலைபெறச் செய்தல் 2017

2017 ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரல் மாதம் BMICH மண்டப வளாகத்தில் நடத்தப்பட்ட பு.ம.தே.அ.ச. 'இலங்கையை புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனை நீங்கி நிலைபெறச் செய்யும்' கண்காட்சிக் கொட்டகை நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைய, மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் 'மதுபானம் அற்ற ஒரு நாடு' எனும் எண்ணக்கருவை மேலும் உயிர்ப்பித்தது.

உலக சுகாதார தினம் 2017

பு.ம.தே.அ.ச. ஒரு கண்காட்சிக் கொட்டகையின் ஊடாக, புகையிலையினதும் மற்றும் மதுசாரத்தினதும் பாவனையினால் ஏற்படும் சுகாதார தீங்குகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலமாக, உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு மற்றும் உ.சு.ஸ். ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்ட வைபவங்களில் ஒரு காத்திரமான பங்களிப்பை நல்கியது.

புகையிலை அற்ற உலக தின கொண்டாட்டம் 2016 WORLD NO TOBACCO 2016





2016 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி BMICH மண்டபத்தில் நடைபெற்ற புகையிலை அற்ற உலக தின கொண்டாட்ட வைபவத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடமும் மற்றும் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரட்ன அவர்களிடமும் புகையிலைக்கு எதிரான வரி முன்மொழிவுத் திட்ட ஆவணம் கையளிக்கப்பட்டது.



புகையிலை அற்ற உலக தின கொண்டாட்ட வைபவத்தை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவிகளுக்கு மத்தியில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட நாடளாவிய ஒரு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் பரிசில்களை வழங்கி வைத்தார்கள்.







புகையிலைக்கு எதிராக போராடும் நிலையம்

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் புகையிலைக்கு எதிராக போராடும் நிலையம் (CCT) புகையிலையை கட்டுப்படுத்தும் வேலைச்சட்டக சமவாயத்தின் (FCTC) 5.3 ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை புகையிலை பற்றி கண்காணிக்கும் நிலையமாகும்.

இலங்கையிலும் மற்றும் ஏனைய பிராந்திய நாடுகளிலும் குறித்த சமவாயத்தின் 5.3 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடைய புகையிலை கைத்தொழில் செயற்பாடுகளை கண்காணிப்பது இந்த புகையிலைக்கு எதிராக போராடும் நிலையத்தின் (CCT) குறிக்கோளாகும். இந்த நிலையம் பு.ம.தே.அ.ச., மதுபானம் மற்றும் போதை வஸ்துகள் தகவல் நிலையம் (ம.போ.வ.த.நி.), இலங்கை மருத்துவ சங்கத்தின் (இ.ம.ச.) புகையிலை, மதுபானம் மற்றும் சட்டமுறையற்ற மருந்துகள் என்பன தொடர்பான நிபுணத்துவ குழு, மற்றும் புகையிலையை கட்டுப்படுத்தும் வேலைச்சட்டக சமவாயத்தினால் (FCTC) ஆதரவளிக்கப்பட்ட செயலகம், காச நோய்க்கும் மற்றும் நுரையீரல் நோய்களுக்கும் எதிரான சர்வதேச ஒன்றியம் என்பவற்றினால் கூட்டாக இணைந்து தாபிக்கப்பட்டது. பாத் பல்கலைக்கழகத்தின் புகையிலையை கட்டுப்படுத்தும் ஆராய்ச்சிக் குழுவினாலும் மற்றும் கலிபோனியா சான் பிரான்ஸிகோ பல்கலைக்கழகத்தின் புகையிலையை கட்டுப்படுத்தல் ஆராய்ச்சி மற்றும் கல்வி ஆகியவற்றுக்கான நிலையத்தினாலும் தொழில் நுட்ப உதவி வழங்கப்பட்டது.

இலங்கைக்கு பொருத்தமான புகையிலை கம்பனிகளினதும் மற்றும் அவற்றின் ஊழியர்களினதும் விரிவான குறிப்புகள் அடங்கிய சான்றுகளின் அடிப்படையிலான தகவல்களை உள்ளடக்கிய டுபாகோ அன்மாஷ்க் (tobaccounmasked.lk) எனும் இணையத் தளத்தின் ஊடாக தகவல்கள் வழங்கப்படுகின்றன. இந்தத் தகவல்கள் செல்வாக்கு செலுத்தும் கொள்கை, புகையிலைக்கு எதிரான வரி, மற்றும் விலை சம்பந்தப்பட்ட விடயங்கள், கூட்டுறவு சமூக முதலீடுகள், புகையிலை பயிர்ச் செய்கை மற்றும் புகையிலையை சந்தைப்படுத்தல், மற்றும் புகையிலையின் பாவனையை ஊக்குவித்தல் என்பன போன்ற கருப்பொருட்களில் புகையிலை கைத்தொழிலினால் பின்பற்றப்படும் திறமுறைத் திட்டங்கள் பற்றி விவரிக்கின்றன.


මතින් හොර
ලොවත් කරා...

NATIONAL AUTHORITY ON TOBACCO & ALCOHOL
STATEMENT OF FINANCIAL POSITION
AS AT 31 DECEMBER 2016

	Note	2016
		Rs.
Assets		
Non Current Assets		
Infrastructure, Plant and Equipment	16	18,778,583.97
Intellectual Assets	17	13,303,780.22
Intangible Assets	18	2,290,000.00
Current Assets		
Inventories	19	18,024.32
Cash & Cash Equivalent	20	1,078,118.68
Total Assets		**35,468,507.19**
Liabilities		
Current Liabilities		
Accrued Expenses	21	31,850.44
Provision for Gratuity	22	61,979.50
General Deposit	23	146,000.00
Total Net Assets		**35,228,677.25**
Net Assets/ Equity		
Capital	24	6,560,893.26
Government Grant	25	34,293,500.00
Excess/(Deficit) for the Year		(5,625,716.01)
		35,228,677.25

The Board of Directors are responsible for the preparation and presentation of these Financial Statements in accordance with the Sri Lanka Public Sector Accounting Standards (SLPSAs). These Financial Statements were approved by the Board of Directors and signed on their behalf.

.....	.....	.....
Dr. Palitha Abeykoon	Dr. T.D. Abeynayake	Anushika Koralage
Chairman	General Manager	Accountant

Dr. Palitha Abeykoon
Chairman
National Authority on Tobacco & Alcohol
11th Floor, Wing - A
Sethsiripaya Stage II, Battaramulla.

General Manager
National Authority on Tobacco & Alcohol
11th Floor, Wing - A
Sethsiripaya Stage II,

Anushika Koralage
Accountant
National Authority on Tobacco & Alcohol
11th Floor, Wing A,
Sethsiripaya Stage II, Battaramulla.

புகையிலைக்கும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை கூற்று

	குறிப்பு	2016 (ரூ.)
சொத்துக்கள்		
நடைமுறையல்லாத சொத்துக்கள்		
உட்கட்டமைப்பு வசதி, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்	16	18,778,583.97
புலமைச் சொத்துக்கள்	17	13,303,780.22
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	18	2,290,000.00
நடைமுறை சொத்துக்கள்		
பொருட்பதிவேடுகள்	19	18,024.32
காசும் காசு ஒப்புரவுகளும்	20	1,078,118.68
மொத்த சொத்துக்கள்		**35,468,507.19**
பொறுப்புக்கள்		
நடைமுறை பொறுப்புக்கள்		
அட்டுறு செலவுகள்	21	31,850.44
பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடுகள்	22	61,979.50
பொதுவான வைப்புத் தொகை	23	146,000.00
மொத்த தேறிய சொத்துக்கள்		**35,228,677.25**
தேறிய சொத்துக்கள்/ஒப்புரவுகள்		
மூலதனம்	24	6,560,893.26
அரசாங்க மானியம்	25	34,293,500.00
குறித்த ஆண்டிற்கான மிகை/(குறைவு)		-5,625,716.01
		35,228,677.25

அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (அ.து.க.நி.) இணங்க இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அவர்களின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டன.

நிதி சார்ந்த கணக்குகள் 2016

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

புகையிலைக்கும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று

	குறிப்பு	2016 (ரூ.)
இயக்கச் செயற்பாடு சார்ந்த வருமானம்		
மீண்டெழும் அரசாங்க மானியம்	9	12,000,000.00
மொத்த வருமானம்		**12,000,000.00**
இயக்கச் செயற்பாடு சார்ந்த செலவுகள்		
தனியாள் வேதனாதிகள்	10	2,170,565.00
விநியோகங்களும் மற்றும் பயன்பட்ட நுகர்வுப் பொருட்களும்	11	353,448.87
பராமரிப்பு சார்ந்த செலவுகள்	12	526,723.88
ஒப்பந்தம் சார்ந்த செலவுகள்	13	8,956,821.43
தேய்மானமும் மற்றும் கழிவுகளும்	14	5,610,656.83
இயக்கச் செயற்பாடு சார்ந்த மொத்த செலவுகள்		**17,618,216.01**
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் மிகை/(குறைவு)		**-5,618,216.01**
நிதி சார்ந்த ஆகுசெலவு		
வங்கிக் கட்டணங்கள்	15	7,500.00
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய மிகைகள்/(குறைவு)		**-5,625,716.01**

புகையிலைக்கும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2016 (ரூ)
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்		
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் மிகை/(குறைவு)		-5,625,716.01
பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:		
தேய்மானம்		0
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்க செயற்பாட்டு இலாபம்		
		-5,625,716.01
தேய்மானத்திலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	14	5,610,656.83
பொருட்பதிவேடுகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	19	-18,024.32
பொது வைப்பு தொகையிலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	23	146,000.00
அட்டுறுவிலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	21	31,850.44
ஊழியர் ஆகுசெலவு தொடர்பான நிதி ஏற்பாடுகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு)	22	61,979.50
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட காசு		**206,746.44**
இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்		**206,746.44**
முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்		
பொறித் தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் கொள்வனவு	16.1	-14,693,492.74
தொட்டுணர முடியாத சொத்துக்களின் கொள்வனவு	18.1	-2,100,000.00
புலமை சொத்துக்களின் கொள்வனவு	17.1	-16,629,725.28
மீண்டெழும் மூலதனம் (அரசாங்க மானியம்)	25	34,293,500.00
முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்		**870,281.98**
காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு)		1,077,028.42
குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்		1,090.26
குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்		**1,078,118.68**

புகையிலைக்கும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒப்புரவு பற்றிய மாற்றங்கள்

	2016 (ரூ.)
2016.01.01 ஆம் திகதியிலுள்ள பு.ம.தே.அ.ச. நிதி	**6,560,893.26**
முன்னைய ஆண்டுகள் தொடர்பான சீராக்கல்கள்	0
	6,560,893.26
2016.01.01 ஆம் திகதியிலுள்ள சீராக்கப்பட்ட நிலுவை	
மீண்டெழும் மூலதனம்	34,293,500.00
குறித்த ஆண்டிற்கான சீராக்கல்கள்	0
குறித்த ஆண்டிற்கான மிகை/குறைவு	-5,625,716.01
2016.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை	**35,228,677.25**

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை 2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

1. கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

1.1. இணக்கப்பாடு பற்றிய கூற்று

நிதி நிலைக் கூற்று, நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று, மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பன புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்குகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள் அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் (அ.து.க.நி.) மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் (இ.ப.க.நி.) விதிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2. தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயம்

இந்த அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு மரபுரிமை அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (இ.ரூ.) எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

1.3. அரசாங்க மானியங்கள்

இந்த அதிகார சபைக்கு இரண்டு வகையான மானியங்கள் கிடைக்கின்றன. அவையாவன பின்வருமாறு:

- மூலதன மானியம்
- மீண்டெழும் மானியம்

மூலதன மானியம் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கீடு செய்யப்படுகின்றது. குறித்த முறையியல் மூலதன மானியத்தை பிற்போடப்பட்ட வருமானமாக குறிப்பீடு செய்கின்றது. இந்த மூலதன மானியம்

அடிப்படை ரீதியில் சொத்துக்களின் பயனுள்ள பாவனை காலத்தின் அடிப்படையில் வருமானமாக (உ-ம்: சொத்துக்களின் வருடாந்த தேய்மானம் குறித்த ஆண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்படுகின்றது) இனங்காணப்படுகின்றது.

மீண்டெழும் மானியம் குறித்த காலப் பகுதியின் வருமானமாக இனங்காணப்பட்டு, நிதி சார்ந்த செயலாற்றுகை கூற்றுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

2. சொத்துக்களும் மற்றும் அவற்றின் விலை மதிப்பீட்டு அடிப்படைகளும்

2.1. சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

சொத்துக்களின் கொள்வனவு அல்லது அத்தகைய சொத்துக்களை எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட ஏதாவது செலவுகள் அடங்கலாக அவற்றின் நிர்மாண ஆகுசெலவே சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் ஆகுசெலவாகும்.

சொத்துக்கள் கிடைக்கக் கூடிய திகதியிலிருந்து அத்தகைய சொத்துக்கள் அகற்றப்படும் வரையான காலப் பகுதிற்கு அவற்றுக்கான தேய்மான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொறித் தொகுதிகளுக்கும் மற்றும் உபகரணங்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நேர் நிரல் முறையியலின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய பொறித் தொகுதிகளும் மற்றும் உபகரணங்களும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்பான இ.அ.து.க.நி. இல் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஆகுசெலவு முறையியலில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அடிப்படை வருடாந்த வீதங்கள் பின்வருமாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன.

	2016
கட்டிடங்களும் மற்றும் பொருத்துக்களும்	25 ஆண்டுகள் (4%)
இயந்திராதிகளும் மற்றும் உபகரணங்களும்	10 ஆண்டுகள் (10%)
தளபாடங்களும் மற்றும் பொருத்துக்களும்	10 ஆண்டுகள் (10%)

கணனிகள்	05 ஆண்டுகள் (20%)
கட்புல ஓடியோ மற்றும் வீடியோ சாதனங்கள்	05 ஆண்டுகள் (20%)
வாகனங்கள்	10 ஆண்டுகள் (10%)
ஏனையவைகள்	10 ஆண்டுகள் (10%)

கொள்வனவு ஆண்டில் அல்லது சுவீகரித்தல் ஆண்டில் தேய்மானத்திற்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. அகற்றப்படும் ஆண்டில் தேய்மானத்திற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.

தேய்மான வீதம், ஒரு சொத்தின் கழிவு பெறுமான பயனுள்ள பாவனை காலம் ஆகியவற்றில் ஒரு கணிசமான மாற்றம் இருந்துள்ளது, புதிய எதிர்பார்ப்பை பிரதிபலிக்கும் பொருட்டு அனுகூல ரீதியில் சொத்துக்களின் தேய்மானம் திருத்தப்பட்டுள்ளது எனும் பட்சத்தில், அடிப்படை ரீதியில் மதிப்பிடப்பட்ட நியம செயலாற்றுகையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகளை பேணும் அல்லது முன்பிருந்த நிலைக்கு கொண்டு வரும் பொருட்டு சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை பேணிப் பராமரிப்பதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு ஏற்பட்ட செலவு, அத்தகைய செலவு எற்படும் போது ஒரு செலவாக இனங்காணப்படுகின்றது.

2.2. தொட்டுணர முடியாத சொத்துக்கள்

மென்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக ஏற்பட்ட செலவு ஒரு தொட்டுணர முடியாத சொத்தாக இனங்காணப்படுகின்றது.

2.3. புலமை சொத்துக்கள்

புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் கட்டுப்படுத்தும் செயல் நடவடிக்கையை வலுப்படுத்துவதற்காக ஏற்பட்ட செலவினம் ஒரு புலமை சொத்தாக இனங்காணப்படுகின்றது. அத்தகைய செயல் நடவடிக்கைகள் விழிப்புணர்வாக/புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான ஆதரவு நிகழ்ச்சித்

திட்டமாக, ஆற்றல் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக, பு.ம.தே.அ.ச. சட்டத்தை அமுலாக்கும் செயற்பாடாக, ஆராய்ச்சி மற்றும் தகவல் முறைமையாக, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமாக இனங்காணப்படுகின்றன.

அடிப்படை வருடாந்த வீதங்கள் பின்வருமாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன.

	2016
புலமை சொத்துக்கள்	5 ஆண்டுகள் (20%)

3. **பொருட்பதிவேடுகள்**
பொருட்கள் ஆகுலெவில் மதிப்பிடப்பட்டுள்ளன.

4. **காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்**
கையிலும் மற்றும் வங்கியிலும் உள்ள காசுகள் காசு மற்றும் காசு ஒப்புரவுகளில் உள்ளடங்குகின்றன.

5. **பொறுப்புக்கள்**
கடந்த கால நிகழ்வுகளின் பயனாக வரும் ஒரு தற்போதைய கடப்பாடு இருக்கின்ற போது பொறுப்புக்கள் ஐந்தொகை காணக்கில் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுகின்றன. கடன் தரப்புகளின் கோரிக்கையில் செலுத்த வேண்டிய பொறுப்பு அல்லது ஐந்தொகை கணக்கு திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் வரும் பொறுப்பு ஐந்தொகை கணக்கில் நடைமுறை பொறுப்புகளாக கருதப்படும்.

6. **வருமான இனங்காணல்**
மூலதன மானியம் பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. மீண்டெழும் மானியம் வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்பட்ட காலப் பகுதிற்கான வருமாக இனங்காணப்படுகின்றது.
சகல வருமானமும் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

7. **பங்களிப்புத் திட்டங்கள்**

இந்த அதிகார சபை ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% வீதம் என ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது.

8. **காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று**

காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று நேரடி முறையியலை பிரயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

குறிப்பு 09	2016 (ரூ.)
மீண்டெழும் மீளளிப்பு	
மீண்டெழும் மீளளிப்பு (9.1)	12,000,000.00
மொத்தம்	**12,000,000.00**

குறிப்பு 10	2016 (ரூ.)
தனியாள் வேதனாதிகள்	
ஊழியர்களுக்கான சம்பளங்கள்	1,742,688.00
ஊ.சே.நி. பங்களிப்பு தொகைகள்	108,119.52
ஊ.ந.நி. பங்களிப்பு தொகைகள்	27,832.66
மேலதிக நேரக் கொடுப்பனவு	229,945.32
பணிக்கொடை தொடர்பான செலவுகள்	61,979.50
மொத்தம்	**2,170,565.00**

குறிப்பு 11	2016 (ரூ.)
விநியோகங்களும் மற்றும் நுகர்வுப் பொருட்களும்	
காகிதாதிகளும் மற்றும் அலுவலக தேவைகளும்	65,135.40
எரிபொருள்	255,751.47
உணவு/தாகசாந்தி	32,562.00
மொத்தம்	**353,448.87**

குறிப்பு 12	2016 (ரூ.)
பராமரிப்பு	
வாகனங்களின் பராமரிப்பு	401,973.88
அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு	124,750.00
கணனிகளின் பராமரிப்பு	0
மொத்தம்	**526,723.88**

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

குறிப்பு 13	2016 (ரூ.)
ஒப்பந்தம் சார்ந்த சேவைகள்	
தபால் கட்டணங்கள்	11,485.00
தொலைபேசி/இன்டர்நெட் கட்டணங்கள்	175,920.82
கட்டிட வரி/துப்புரவாக்கல் சேவைகள்	7,888,405.56
நிருவாக சபை உறுப்பினர்களுக்கான கட்டணங்கள் மற்றும் தாகசாந்தி செலவுகள்	460,197.00
விளம்பரம்/ஏனைய செலவுகள்	420,813.05
மொத்தம்	**8,956,821.43**

குறிப்பு 14	2016 (ரூ.)
தேய்மானம் - பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்	
கட்டிடங்களும் மற்றும் பொருத்துக்களும்	34,013.20
இயந்திராதிகளும் மற்றும் உபகரணங்களும்	110,518.97
தளபாடங்களும் மற்றும் பொருத்துக்களும்	94,668.80
கணனிகள்	234,420.00
வாகனங்கள்	1,414,350.00
கற்புல ஓடியோ மற்றும் வீடியோ சாதனங்கள்	394,450.00
ஏனையவை	2,290.80
தேய்மானம் - புலமை சொத்துக்கள்	
புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் புதிதாக நுகர்பவர்களை தடுக்கும் நடவடிக்கையில் பொது மக்களுக்கு வலுவூட்டுதல்	1,041,457.88
புகையிலை பழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்தல்	11,232,73
பு.ம.தே.அ.ச. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்	891,353.84
பு.ம.தே.அ.ச. அலுவலக கட்டிடம்	28,811.16
மதுபானத்தினால் ஏற்படும் தீங்குகளை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தி	368,516.68
புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்குமான கேள்வி மற்றும் விநியோக குறைப்பு	984,572.77
மொத்தம்	**5,610.656.83**

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

குறிப்பு 15	2016 (ரூ.)
நிதி சார்ந்த ஆகுசெலவு	
வங்கிக் கட்டணங்கள்	**7,500.00**
மொத்தம்	**7,500.00**

குறிப்பு 16	2016 (ரூ.)
பொறித் தொகுதிகளும் மற்றும் உபகரணங்களும் (16.1)	
கட்டிடங்களும் மற்றும் பொருத்துக்களும்	1,666,646.80
இயந்திராதிகளும் மற்றும் உபகரணங்களும்	994,670.73
தளபாடங்களும் மற்றும் பொருத்துக்களும்	852,019.24
கணனிகள்	937,680.00
வாகனங்கள்	12,729,150.00
கற்புல ஓடியோ மற்றும் வீடியோ சாதனங்கள்	1,557,800.00
ஏனையவை	20,617.20
மொத்தம்	**18,778,583.97**

குறிப்பு 17	2016 (ரூ.)
புலமை சொத்துக்கள் (17.1)	
புகையிலையையும் மற்றும் மதுசாரத்தையும் புதிதாக நுகர்பவர்களை தடுக்கும் நடவடிக்கையில் பொது மக்களுக்கு வலுவூட்டுதல்	4,165,831.50
புகையிலை பழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்தல்	44,930.92
பு.ம.தே.அ.ச. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்	3,365,415.34
பு.ம.தே.அ.ச. அலுவலக கட்டிடம்	115,244.64
மதுபானத்தினால் ஏற்படும் தீங்குகளை குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தி	1,474,066.72
புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்குமான கேள்வி மற்றும் விநியோக குறைப்பு	3,938,291.10
மொத்தம்	**13,303,780.22**

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

குறிப்பு 18	2016 (ரூ.)
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	2,290,000.00
மொத்தம்	**2,290,000.00**

குறிப்பு 19	2016 (ரூ.)
பொருட்பதிவேடுகள் (19.1)	
காகிதாதிகள்	18,024.32
அச்சீட்டுப் பொருட்கள்	0
அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு	0
மொத்தம்	**18,024.32**

குறிப்பு 20	2016 (ரூ.)
காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்	
பத்தரமுல்ல இலங்கை வங்கி: கணக்கு இல: 0077769376	1,078,118.68
கையிலுள்ள காசு	0
மொத்தம்	**1,078,118.68**

புகையிலைக்கும் மற்றும் மதுசாரத்திற்கும் எதிரான தேசிய அதிகார சபை

2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு

குறிப்பு 21	2016 (ரூ.)
அட்டுறு செலவுகள் (21.1)	
மேலதிக நேரக் கொடுப்பனவு	23,619.68
செய்திப் பத்திரிகைகள்	8,230.76
துப்புரவேற்பாடு சார்ந்த செலவுகள்	0
தொலைபேசி கட்டணங்கள்	0
ஊ.சே.நி.	0
ஊ.ந.நி.	0
மொத்தம்	**31,850.44**

குறிப்பு 22	2016 (ரூ.)
ஒதுக்கீடுகள்	
பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடு	61,979.50
மொத்தம்	**61,979.50**

குறிப்பு 23	2016 (ரூ.)
பொது வைப்பு தொகை	
பொது வைப்பு தொகை	146,000.00
மொத்தம்	**146,000.00**

குறிப்பு 24	2016 (ரூ.)
மூலதனமும் மற்றும் ஒதுக்கீடுகளும்	
பு.ம.தே.அ.ச.	6,560,893.26
மொத்தம்	**6,560,893.26**

குறிப்பு 25	2016 (ரூ.)
அரசாங்க மானியம் - மூலதனம்	
மீண்டெழும் மூலதனம் (25.1)	24,050,000.00
வாகனம் - மைக்ரோ வேன் - WPPH 3563 - திறைசேரியின் மூலம்	10,243,500.00
மொத்தம்	**34,293,500.00**

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. එච්එස්එම්/ඩී/එන්ඒටීජ්/02/2016

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 ජනවාරි 30 දින

සභාපති,

දුම්කොළ හා මධ්‍යසාර පිළිබඳ ජාතික අධිකාරිය

දුම්කොළ හා මධ්‍යසාර පිළිබඳ ජාතික අධිකාරියේ 2016 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

මාගේ සමාංක හා 2017 ඔක්තෝබර් 16 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත

ඊ.ඒ.ජී. ආනන්ද

නියෝජ්‍ය විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

පිටපත් :
1. ලේකම් - සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. எச்எஸ்எம்/டீ/
என்ஏரீஏ/02/2016

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2017 ஒக்தோபர் 16

தலைவர்,
புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2017 செப்தெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 அதிகாரசபையைத் தாபித்தலும் அதன் செயற்படு நிலையும்

2006 செப்தெம்பர் 01 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் II ஆவது பிரிவின் மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் மூலம் 2008 ஆம் ஆண்டின் போது இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்ததுடன் அன்றிலிருந்து

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகார சபைக்கான முதலாவது தடவையாக நிதிக்கூற்றுத் தொகுதி தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கட்டிட பொருத்திகளில் 4 சதவீதம் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்தல் கணக்கீட்டுக் கொள்கையாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2 சதவீதம் மாத்திரம் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டமையினால் வருடாந்த பெறுமானத் தேய்வுச் செலவினம் ரூபா 34,013 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) 2015 யூலை 14 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 03/2015	19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 855,248 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டமையினால் அதில் 25 சதவீதத்திற்கும் 79 சதவீதத்திற்கும் இடையேயான சதவீதமொன்று அதாவது ரூபா 400,869 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய பணி நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் செயல்நிமித்த உபகட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 674,187 கூட்டுத்தொகையான கட்டுநிதி 12 நாட்கள் முதல் 61 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் பட்டியல் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 26 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த கட்டுநிதிகளில் சேமிக்கப்பட்ட பணம் ரூபா 424,035 தொகை 02 நாட்கள் முதல் 27 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.
(ஆ) 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி	வழங்குனர்களுக்கு 18 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,514,932 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகார சபையின் நிதி விளைவுகள் ரூபா 5,625,716 பற்றாக்குறையாக இருந்தது. எனினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் அதிகாரசபையின் பங்களிப்பு ரூபா 2,163,005 ஆக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தது.

